மயிலாடுதுறை

தலவரலாற்றுச் சுருக்கம்

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான

அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயில்

1987

T14871

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மயிலாடுதுறைத்
தலவரலாற்றுச் சுருக்கம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

மயிலாடுதுறை

அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலில்

வெளியிடப்பெற்றது.

1987

விலை ரூ. 2-50

உ

சிவமயம்

ஸ்ரீ அபயாம்பிகை தோத்திரம்

பரந்தமலர்க் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையும் பசுவேய்த் தோளும்
சுரந்தஅருள் பொழியும்இரு விழியும்எழில்
வழிமுகமும் துணைப்பொற் றோடும்
கரந்ததிரு இடையும்ஒண்செம் பட்டுடையும்
மங்கலப்பொற் கழுத்தும் நாளும்
இரந்தவருக்கு அருள்அஞ்சல் நாயகிநா
புரப்பதமும் இறைஞ்சி வாழ்வாம்.

— மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை.



அருள்மிகு அபயாம்பிகை

பதிப்புரை

இந்நூல், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருமயிலாடுதுறை அருள்மிகு அபயாம்பிகை உடனுறையும் அருள்மிகு மாயூரநாதப் பெருமான் திருக்கோயில் வரலாறு, திருவிழா விபரம், தலத் தேவாரத் திருப்பதிகங்களைக்கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளை விளக்குவது.

இவ்வாதீனத்து இருபத்துமூன்றாவது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளிச் சித்தாந்த சைவச் செந்நெறியினையும் செந்தமிழையும் புரந்தருளும் ஸ்ரீ - ல - ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் இந்நூல் வெளியிடப்பெறுகின்றது.

உ

சிவமயம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

திராவிடமாபாடியகர்த்தர்
ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகள்

உ

சிவமயம்

மாயூரம் தலவரலாற்றுச் சுருக்கம்

கருணைப்பெருக்கம்

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான், உயிர்களாகிய நம்மீதுவைத்த எல்லையில் கருணையால் திருவுருவம் தாங்கி அங்கங்கே வந்து அருள் செய்வார். அங்ஙனம் அருள்வழங்குகின்ற இடங்களே தலங்கள். இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்தவர். ஆனாலும், அருட்பொலிவோடு விளங்கும் இடங்கள் தலங்கள். மின்னாற்றல் எங்கும் நிறைந்திருந்தாலும் விளக்கின் வழியாகத்தான் ஒளி வெளிப்படுகின்றது. பசுவின் உடம்பெங்கும் பால் நிறைந்திருந்தாலும் மடிக்காம்பு வழியாகத்தான் பாலைப் பெறுகின்றோம் அது போல எங்கும் நிறைந்த பொருளாகிய சிவம், தலங்களிலே விளக்கமுற்றுத் தோன்றும். தலங்கள் அளவற்றன. அவற்றுள் ஆயிரத்தெட்டுத் தலங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் சமயாசாரியப் பெருந்தகைகளால் பாடல் பெற்ற சிவத்தலங்களே மிகச்சிறந்தன. அவற்றுள்ளும் காவிரியின் இருகரை மருங்கிலுமுள்ள தலங்கள் மிக மேலானவை. அவற்றுள் தொன்று தொட்டுநின்று நிலவும் மாயூரம் என்னும் திருமயிலாடுதுறை மிகச் சிறந்ததாம்.

இடத்திற்கும் சூழலிற்கும் ஏற்பவே மனித மனம் உயர்கிறது; ஒன்றுகிறது. அடர்ந்தபொழிலும், ஓடுகிற ஆறும், மிகத் தண்மையான சூழலும் மன ஒருமைப்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதன அவ்விலக்கணம் முழுதும் அமைந்த ஒருதலம் உண்

டெனில் அது மாயூரமே. 'ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது' என்பது ஒரு பழமொழி. இது எவ்வளவு ஆழமான பொருளுடையது என்று எண்ணிப் பாருங்கள்.

தலமும் இருப்பிடமும்

நிலமகளுக்கு முகம்போல்வது சோழநாடு என்று சேக்கிழார் போன்ற தெய்வக்கவிஞர்கள் சிந்திக்கிறார்கள். சோழநாடு முகமாகும்போது அதன் திலகமாக விளங்குவது மாயூரம் என்னலாம் இது தென்னிந்திய புகைவண்டி நேர்பாதையில். சென்னை இராமேச்சுரம் வழியில் பெரிய சந்திப்பாக விளங்குகிறது

மாயூரத்திலிருந்து தரங்கம்பாடிக்கும், திருவாரூர் வழியாகக் காரைக்குடிக்கும், திருச்சிராப்பள்ளிக்கும் சிதம்பரம் வழியாகச் சென்னைக்கும் புகைவண்டிக் கிளைபபாதைகள் பிரிகின்றன. எல்லா இடங்கட்கும் போய்வர பஸ்வசதி உண்டு. சந்திப்பிலிருந்து நகர்க்கும் நகர பஸ்கள் பல போய் வந்துகொண்டிருக்கின்றன. தலத்திற்கும் சந்திப்பிற்கும் சுமார் இரண்டு மைல்தூரம் இருக்கும்.

இங்கு முனிசீப் கோர்ட்டு, சப்கலெக்டர் ஆபீஸ், தாலுக்கா ஆபீஸ், ஸ்டேட்பாங்க், பெரிய அஞ்சல் நிலையம், மற்ற எல்லா அரசாங்க அலுவலகங்களும் இருக்கின்றன. இதன் மக்கள்தொகை சுமார் நாற்பத்திரண்டாயிரம். நகராண்மைக்கழக ஆட்சிக்குட்பட்ட சுகாதார விதிகளையும நகர அமைப்புத் திட்டங்களையும் உடையது. இங்கு A. V. C. கல்லூரி, நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளிகள், தேசீய உயர்நிலைப்பள்ளி, அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி முதலிய பல கல்வி நிலையங்கள் உள்ளன.

நீர்வசதி

காவிரிக்கரையில் சுமார் இரண்டு மைல் நீளம் இத்தலம் அமைந்திருப்பதும், நகரின் நடுவிலே பல கால்வாய்கள் ஓடுவதும், அங்கங்கே நல்லநிலையி லுள்ள பல குளங்கள் அமைந்திருப்பதும் இத்தலத் திற்குத் தனிப்பெருமை அளிப்பன. இத்தலத்தின் தட்பவெப்ப நிலை சராசரி 100 F. C. அதனுல் புஞ் சைப் பயிர்களும், மரங்களும் நன்ருகச் செழித்து வளர்வதற்கு ஏற்ற வசதிகள் நிறைந்துள்ளன. இந்தத் தலத்திலே சோழமன்னன் தன் முடிசூட்டு விழாக்காலத்தில் அந்தணர்களாகிய பட்டர்களுக்கு வீடுகள் கட்டித் தானமாக வழங்கினுன். அவை, பட்டமங்கலத்தெரு என்றும், மகாதானத்தெரு என்றும் வழங்குகின்றன. இவையே இவ்வூரின் ஒழுங்கான அழகான தெருக்கள். இங்கே கோயில்கள் மிகுதியாக இருப்பதால் அவற்றைச் சுற்றிலும் பல நான்கு வீதிகள் அமைந்துள்ளன.

திருக்கோயில்

மாயூரம் பெரியகோயில் என வழங்கப்படுவது ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயிலாகும். இது மிகத்தொன்மையானது. நான்குபக்கச் சுற்றுமதில் களும், கிழக்கே பெரிய கோபுரமும், ஏனைய மூன்று பக்கங்களிலும் மொட்டைக் கோபுரங்களும் இருக் கின்றன. இக்கோயிலின் பரப்பு 378913 சதுர அடியாகும். கீழ்மேலடி 719. தென்மேலடி 519 தென்வடக்கு 527 அடிகள் உடையது. வீதி உள்பட ஐந்து சுற்றுலைகள் உள்ளன. பிறகோயில்களைப் போல அர்த்தமண்டபம், மகாமண்டபம, அந்தராள மண்டபம், வசந்தமண்டபம் முதலியன எல்லாம் உரிய இடங்களில் விளங்குகின்றன. சுவாமிகோயிலும்

அம்பாள்கோவிலும் அண்மையில் திருப்பணி செய்விக்கப்பெற்றவை. அணியொட்டி மண்டபத்தூண்கள் சிற்பத்திறங்கள் செறிந்தவை. திருக்கோயிலுக்கு எதிரில் கீழ்க்கோபுரத்தை அடுத்துப் பிரமதீர்த்தமாகிய திருக்குளம் அமைந்திருக்கிறது.

மூர்த்திகள்

இங்குக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற இறைவன ஸ்ரீ மாயூரநாதர் என்று அழைக்கப்படுவார். அம்மை ஸ்ரீ அஞ்சல்நாயகி என்று அழைக்கப்படுவார். தேவாரத்திருப்பாடல்களில் இறைவன் மயிலாடுதுறை அரன், மயிலாடுதுறையன், அஞ்சொலாளுமைபங்கன் எனவும், அம்மை அஞ்சொலாள் எனவும் வழங்கப்படுகின்றனர்.

வடமொழியில் ஸ்ரீ மாயூரநாதசுவாமி எனவும் அபயாம்பிகை எனவும் பெயர்கள் வழங்குகின்றன. பெருமானுக்குப் பிரமலிங்கம், மாயூரநாதர், வள்ளலார் என்ற பெயர்கள் வழங்குகின்றன. கல்வெட்டுக்களில் மயிலாடுதுறையுடைய நாயகர் எனக் காணப்படுகிறது.

கொடிமரத்திற்குத் தெற்குப்பக்கத்திலேயே பெரிய விநாயகர் என்ற பெயருடன் தலவிநாயகர் எழுந்தருளி இருக்கிறார். வடக்குப்பக்கத்தில் ஆறுமுகப் பெருமான் அமைந்திருக்கிறார். இந்த இருமூர்த்திகளும் மிகக்கவர்ச்சிகரமானவை. நாம் கோயிலுக்குள் புகுந்தவுடனேயே மூத்தபிள்ளையார் நம்மை ஆட்கொண்டு இறைவன் திருமுன்பு ஆட்படுத்துகின்றனர் என்னலாம். கர்ப்பக்கிருகத்தின் பின்பக்கத்தில் குமர கோயில் இருக்கிறது. அதில் பாலசுப்பிரமணியப் பெருமான் தன் இருபெருந்தேவிகளோடு எழுந்தருளியிருக்கிறார்.

5

வெளிப்பிரகாரத்தில் வடக்கு மதிலையொட்டிக் கிழக்குமுகமாக கோயில் ஒன்று இருக்கிறது. அங்கே சிவலிங்கத் திருவுருவமாக எழுந்தருளியிருக்கின்றவர் ஆதிமாயூரநாதர். அக்கோயிலின் உள்ளே தாமிரத்தில் செய்யப்பட்ட ஒரு மயிலுருவம் உள்ளது. அதுதான் அம்மையார் மயில் உருவம் பெற்ற நிலை. இறைவன் எழுந்தருளியிருக்கும் விமானத்தின் தென் மேற்கு மூலையில் ஒரு விநாயகர் இருக்கிறார். அவர் அகத்தியரால் ஸ்தாபிக்கபெற்றவர்; அதனால் அகத்திய விநாயகர் என்று அழைக்கப்படுகின்றார். களஞ்சியத்து வெளித்திண்ணையில் களஞ்சியப் பிள்ளையாரென்னும் கணக்குப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறார். களஞ்சியவாயிலில் நாதசன்மா வழிபாடுசெய்து ஐக்கியமான சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கிறார்.

இவற்றை வழிபட்டுக்கொண்டு வடக்குநோக்கிச் சென்றால் அபயாம்பிகை சன்னிதியை அடையலாம். அபயாம்பிகையின் சன்னிதியில் அடிவைத்தவுடனே அம்மையின் கருணைவெள்ளம் இழுக்க நம்மையும் அறியாமலேயே நம் மனம் செல்லும். தாய் தனது குழந்தையை இருகையையும் நீட்டி அழைப்பது போல நிலவும் அமைப்பு அம்மை திருமுன்பு நம்மை இழுத்துச்செல்வதாக இருப்பது சிந்தித்தற்குரியது. அம்மை நின்றதிருக்கோலத்தில் நான்கு கைகளுடன் திரிபங்கமாக எழுந்தருளியிருக்கின்றார். அம்மையாருடைய மேற்கரங்கள் இரண்டிலும் சங்கு சக்கரங்கள் இருக்கின்றன. தொங்குகின்ற இடது திருக்கரம் தொடைமேல் தொங்குகின்றது. வலது திருக்கரத்தில் ஒன்று, கிளியை ஏந்தி அபயம் அளிப்பதாக விளங்குகிறது. புன்முறுவலுடன் அருளே உருவாய், அன்பர்களுக்குக் கண்கண்ட தெய்வமாய் விளங்குகின்றார் அன்னை அபயாம்பிகை.

6

அம்மையின் கர்ப்பக்கிருகத்தின் தென்புறத்திலே ஒரு சிவலிங்கத்திருமேனி விளங்குகிறது. அதன் நாமம் அநவித்யாம்பிகை என்பது. இந்தப் பெயரைக் கேட்டவுடன் அம்மையே சிவலிங்கமாக விளங்குகிருரா? சிவலிங்கந்தான் அம்மையின் திருநாமத்தைப் பெற்றிருக்கிறதா? என்ற ஐயம் நமக்கு உண்டாகும். அதற்கு ஏற்றவாறு அச்சிவலிங்கப் பெருமானுக்குப் புடவை சாத்துவது வழக்கம். அதுவும் நமக்குள்ள சந்தேகத்தை வலுப்படுத்தும். ஆனல் நாதன்சன்மாவின் மனைவியான அனவித்தியை இறைவனைப் பூசித்துச் சிவலிங்கத்தில் ஐக்கியமானதால் அனவித்தியை சிவலிங்கமாக விளங்குகிருள் என்பதை வரலாறு கொண்டு தெளிவோம்.

அம்மைக்கு அபயாம்பிகை, அபயப்பிரதாம்பிகை, அஞ்சல்நாயகி அஞ்சலை, மயிலம்மை என்ற பல திருப்பெயர்கள் தலவரலாறுகளையொட்டி வழங்குகின்றன.

தட்சயாகத்திலும் கௌதமரின் சாபத்தாலும் அஞ்சிவந்து அடைக்கலம்புகுந்த மயில்களுக்கு அபயமளித்தமையாலும் பிறவிச்சுழலிற்பட்டு அவதியுற்று ஓடி வந்து அடைக்கலம்புகும் ஆன்மாக்களுக்கு அனவரதமும்அபயம் அளிக்கின்றமையாலும அபயாம்பிகை, அபயப்பிரதாம்பிகை என்ற வடமொழிப் பெயர்களும், அஞ்சல்நாயகி, அஞ்சலை என்ற தமிழ்ப் பெயர்களும் அமைந்தன. ஏனைய தலங்கள் போலவே மற்ற பரிவார தேவதைகள் அனைவரும் எழுந்தருளியிருக்கிருர்கள்.

தீர்த்தங்கள்

இடபதீர்த்தம்: துலாக்கட்டம் என வழங்கும் காவிரித்துறையில் ஆற்றின் நடுவிலே மேற்கு நோக்கி இடபப்பெருமான் எழுந்தருளியிருக்கிருர். இடபத்-

தின் செருக்கு அடங்கப் பரமன் அருள் செய்த தீர்த்த மாதலின் இப்பெயர்பெற்றது. இதில் ஐப்பசி முழுவதும் கார்த்திகை முதல்நாளும் நீராடுவது சிறப்பு தருவதாகும். அதிலும் ஐப்பசி அமாவாசை சிறப்பானது. அன்றுதான் கங்கையைக் காவிரி புனிதமாக்கிய நாள்.

பிரமதீர்த்தம்: இது இவ்வாலயத்தினுள்ளேயே அக்கினிமூலையிலமைந்த திருக்குளம் பிரமன் நீராடிப் படைப்புத்தொழில் கைவரப்பெற்றமையால், அவன் பெயராலேயே வழங்குவதாயிற்று மயிலம்மை நீராடிப் பூசித்ததும் இத்தீர்த்தத்திலேயேதான.

அனவித்யாசரஸ்: இது இப்பொழுது ஐயன் குளம் எனவும் தேரடிக்குளம் எனவும் வழங்குகிறது சன்னதிக்கு நேர்கிழக்கில் கீழவீதியிலிருக்கிறது.

அகத்திய தீர்த்தம்: கோயிலில் தட்சிணாமூர்த்தி சன்னிதிக்குக் கீழ்ப்பாலுள்ள சதுரக்கிணறு அகத்தியர் அமைத்தமையால் இப்பெயர் பெற்றது.

தலவிருக்ஷம்

மாமரம்: அதனால் சூதவனம் என்று வடமொழி நூல்களில் இத்தலம சொல்லப்படுகிறது.

சபை

ஆதிசபை: மாயூரநாதர், மயிலுருவாக இருந்து பூசித்த அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். அங்ஙனம் மணம்செய்த இடமே ஆதிசபை.

கூத்து

கௌரீதாண்டவம்: உமாதேவியாராகிய பெண் மயிலுடன் மாயூரநாதர் ஆண்மயில் உருக்கொண்டு

ஒரு தாண்டவம் ஆடினார். இத்தாண்டவம் மயூர தாண்டவம் எனவும் அழைக்கப்படும். இன்றும் துலா மாசம் ஐந்தாம் திருநாளில் அம்மையார் மயிலாகிப் பூசித்து அந்த ஆனந்தத்தால் மயூரநடனம் ஆடுவதைத் தரிசித்து உய்யலாம்.

திருவிழாக்கள்

ஆகமவிதிப்படி அமைந்துள்ள மாச உற்சவம், பட்சஉற்சவம், சுக்கிரவார அம்பாள் புறப்பாடு, விஷு புண்யகால விழாக்கள் எல்லாம் இங்கு உண்டு. சிறப்பாக வசந்தகாலத்தில் பத்துநாள் நடைபெற்று வருகின்ற சைத்ரோற்சவமே இத்தலத்தின் பெருவிழா.

துலாமாதவிழா

இம்மாதம் முழுவதும் இக்கோயில் விழாத்தான். ஐப்பசி விஷுபுண்ணியகாலத்தில் பஞ்சமூர்த்தியும் காவிரிக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பார்கள். இமமாத அமாவாசை, கடைமுழுக்கு இந்நாட்களில் நடைபெறும விழா மிகப்பெரிய விழா.

ஐப்பசி அமாவாசை

தீபாவளி அமாவாசை அன்று கங்கை முதலிய புண்ணியநதிகள் யாவும் இத்துலாக்கட்டத்தில் வந்து நீராடித் தத்தம் பாவங்களைப்போக்கி புனிதமானதாக வரலாறுகூறும். அன்று நண்பகலில் இடபத்துறையில் காவிரிநீரைக் கரகததில் எடுத்து எத்தனை ஆண்டுகள் வைத்திருந்தாலும் கெட்டுப்போவதில்லை என்ற உறுதி இன்றும் மக்களிடையே காணப்படுகிறது.

9

கடைமுழுக்கு

இது ஐப்பசித்திங்களின் இறுதிநாளன்று நடைபெறும் தீர்த்தவிழா ஆகும். இந்தியமக்கள் அனைவரும் அறிந்த ஓர் பெரிய விழா. அன்று மாயூரநாதசுவாமி கோயில் பஞ்சமூர்த்திகளும் புறப்பட்டு வந்து தீர்த்தம் கொடுத்தருளுவர். அனறியும் கைகாட்டும் வள்ளலார், விசுவநாதர், ஐயாறப்பர் முதலியவர்களும் அங்கு எழுந்தருளித் தீர்த்தங் கொடுப்பார்கள்.

முடமுழுக்கு

இது கார்த்திகை மாத முதல்நாள் விடியற்காலையில் நடைபெறுவது. கடைமுழுக்கில் முழுகிய மக்கள் முடமுழுக்கில் மூழ்காவிட்டால் பலனில்லை என்ற உறுதிமக்களிடையே நிலவுகிறது. ஆதலால் யாவரும் மறுநாள் தங்கியிருந்து மூழ்கியே செல்வார்கள். ஒரு முடவன் கடைமுழுக்கில் மூழ்கத் தன்னால் ஆனவரை நகர்ந்து நகர்ந்து வந்து கொண்டேயிருந்தான். கடைமுழுக்கு விழா கழிந்துவிட்டது. இவ்வுளவு அவதிப்பட்டு வந்தும் கடைமுழுக்கில் மூழ்கமுடியவில்லையே என்று கவலைப்பட்டு, மாயூரநாதசுவாமி சன்னிதியில் சென்று முறையிட்டு அங்கு ஒரு மண்டபத்தில் படுத்து உறங்கினான். இறைவன் கனவில்தோன்றி ' நீ அருணோதயத்தின்முன் இடப தீர்த்தத்தில் நீராடு ; துலாமாசம் முழுவதும் முறையே மூழ்கியபயன் சித்திக்கும் ' என்று கூறி மறைந்தார். அவனும் அவ்வாறே சென்று மூழ்கி முத்தியடைந்தான். இது செவிவழிச்செய்தி,

திருக்கலியாணம்

இது துலாமாசவிழாவின் ஏழாம்நாளன்று நடைபெறுவது அன்று இரவுதான் மயிலம்மை மாயூரநாதருடன் மயூர தாண்டவம் ஆடுவதுவழக்கம்.

10

சுற்றுத் தலங்கள்

இத்தலத்தைச் சுற்றிலும் ஐந்து மைல்களுக்கு கிழக்கு முதலாக முறையே திருச்செம்பொன்பள்ளி, திருக்கருப்பறியலூர், விளநகர், குத்தாலம், நின்றியூர், நீடூர், குறுக்கை முதலான பாடல்பெற்ற தலங்கள் விளங்குகின்றன. திருவிழந்தூர் என்று வழங்கப்படும் திருஇந்தளூர் கம்பன் பிறந்த தேரழுந்தூர் முதலிய வைணவத்தலங்களும் சிறப்புடன் விளங்குகின்றன. மற்றும் இத்தலத்தின் பல்வேறு பகுதிகளில் ஐந்து விசுவநாதர் ஆலயங்கள் உள்ளன.

கடைத்தெரு விசுவநாதர் கோயில்: இது துலாக் கட்டத்தின் தெற்கே உள்ளது. கிழக்குப் பார்த்த சன்னிதி.

பாலக்கரை விசுவநாதர் கோயில்: இது காவிரிப் பாலத்தின் தென்கரையில் உள்ளது.

வள்ளலார் விசுவநாதர் கோயில்: இது காவிரி நதியின் வடகரையில் வள்ளலார் தீர்த்த மண்டபத்தின் கீழ்ப்பகுதியில் இருக்கிறது.

படித்துறை விசுவநாதர் கோயில்: இது திம்மப்ப நாயக்கர் படித்துறையில் இருக்கிறது.

உள் விசுவநாதர் கோயில்: இது மாயூரம் வடக்கு வீதிக்கும் கோயிலின் வடக்குத் திருமதிலுக்கும் நடுவிலுள்ளது. இவ்வைந்து கோயில்களையும் முறையே கண்ணுவர், கௌதமர், அகத்தியர், பரத்துவாசர் இந்திரன் என்னும் ஐவரும் ஸ்தாபித்துப் பூசித்தனர்.

பிற கோயில்கள்

திருக்கோயிலுக்குக் கிழக்கே சுமார் ஒன்றரை மைல் தொலைவில் எமன் பூசித்த தலமாகிய தருமபுரம்

இருக்கிறது. திருக்கோயில் மேலவீதியில் ஐயாறப்பர் கோயிலிருக்கிறது. மாயூரம் நகராண்மைக்கழகத்தின் எதிரில் ஏழுமாதர்கள் கோயில் இருக்கிறது. தரங்கம் பாடிக்குச் செல்லுகின்ற கற்சாலையின் வடபாகத்தில் இரண்டு மாரியம்மன் கோயில்கள் உள்ளன. கோயி லின் தென்பால் ஒரு ஐயனார்கோயில் இருக்கிறது இவையெல்லாம் இப்பெரிய கோயிலின் ஆட்சிக்கும பராமரிப்புக்கும் உட்பட்டவை.

இவையன்றிப் பல்லவராயப்பட்டுக்குச் செல்லும் பாதையில் தான்தோன்றீசம் என்னும் பிராமி வழிபட்ட தலமும், தருமபுரத்திற்கு நேர வடக்கே காவிரி வடகரையில் கர்ணப்பேட்டை என வழங்கும் கருங் குயில்நாதன் பேட்டையாகிய மாகேசுவரி வழி பட்ட தலமும், கஞ்சாறூர் எனவழங்கும் ஆனந்த தாண்டவபுரமாகிய கௌமாரி வழிபட்ட தலமும், காவிரியின் வடகரையில் வள்ளலார்கோயிலுக்குக் கீழ்பால் பசு பதீசுரம் என்று வழங்கும் வைரவி பூசித்த தலமும், தருமபுரம் என்னும் இந்திராணி வழிபட்ட தலமும், வழுவூர் என்னும் வராகி வழிபட்ட தலமும், உத்தர மாயூரம் என்னும சாமுண்டி வழிபட்ட தலமும் இப்பெரிய திருக்கோயிலை அடுத்துச் சூழ அமைந்து விளங்குகின்றன.

தேவாரப் பதிகங்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தக்கராகப் பண் அமைந்த திருப்பதிகம் ஒன்று. சாதாரிப்பண் அமைந்த பதிகம் ஒன்று. திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்று ஆகமூன்று திருப்பதிகங்களுள்ளன. மற்றும் அடைவு திருத் தாண்டகம் திருவீழிமிழலைத் திருத்தாண்டகம், திரு வெண்ணியூர்த் திருத்தாண்டகம் ஆகிய

வற்றிலும் இந்தத் தலத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவையன்றி அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ்ப் பாடல் ஒன்று உண்டு. அதில் இத்தலம் 'சிகண்டியூர்' என்று குறிக்கப்படுகிறது.

இலக்கியங்கள்

கந்தபுராணம், வழிநடைப்படலத்தில் முருகன் சேய்ஞலூரை விட்டுப் புறப்பட்டுத் திருவிடைக்கழி போகின்றவழியில் இத்தலத்தை வழிபட்டுச்சென்ற தாகத் தெரிவிக்கிறது.

நல்லத்துக்குடியில் வாழ்ந்துவந்த கிருஷ்ணஐயர் என்பவரால் இயற்றப்பட்ட அபயாம்பிகை சதகம், திருமயிலை வெண்பா அந்தாதி முதலிய நூல்களும் உள்ளன. இந்தப்பகுதியில் பள்ளிக்கூடக்கண்காணிப் பாளராக இருந்த வி. முத்துசாமி அய்யர் M.A., L.T., அவர்கள் பாடிய திருமயிலைத் திரிபந்தாதி என்னும் நூலும் உண்டு.

சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பொன்விளைந்தகளத்தூர் ஆதியப்ப நாவலரால் இயற்றப்பட்ட பழைய மாயூரப்புராணம் ஒன்று உண்டு. இப்போதும் அது கிடைப்பது இல்லை. அக் காலத்தும் இலலை

திருவாவடுதுறை ஆதீனமகாவித்துவானுயிருந்த திரிசிரபுரம் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இத்தலத்திலேயே வீடுவாங்கிக்கொண்டு தெற்கு வீதியில் கட்டளைமடத்துக்குப் பக்கத்தில் வசித்துவந் தார்கள். மாயூரத்தில் அப்போது கட்டளையாக இருந்த ஸ்ரீமத் முத்துகுமாரத் தம்பிரான் சுவாமிகள் விருப்பின்படி அழகியபுராணம் ஒன்றை எழுதினுர்கள்

அதுதான் இப்போதுள்ள மாயூரப்புராணம். அது 64 படலங்களை உடையது. 1894 செய்யுட்களை உடையது.

நிர்வாகம்

இக்கோயில் குமரக்கட்டளை நீங்கலாகத் திருக் கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானது உச்சிக்காலக்கட்டளை. பிச்சைக் கட்டளை, அர்த்தயாமக்கட்டளை அடைக்காமக்கட்டளை காலசந்திக்கட்டளை முதலிய கட்டளைகள் சிறப்புற நடைபெறுகின்றன.

முடிப்புரை

இத்துணைச் சிறப்புற்ற மாயூரத்தலத்தில் அஞ்சல் நாயகி சமேத ஸ்ரீ மயிலாடுதுறைநாதர், என்றும் எழுந்தருளியிருந்து இம்மை மறுமை இன்பங்களை அளித்துவருகிறார். அபயாம்பிகை கலிகாலத்தும் கண் கண்ட தெய்வமாகக் கருணை வழங்கி வருகிறார். இவர்களை வழிபட்டு இன்புற்று இனிது வாழ்வோமாக.

புராண வரலாறுகள்

திலீபன் முத்தி அடைந்தது

சூரியகுலத்தில் திலீபன் என்னும் அரசன் ஒருவனிருந்தான். அவன் அயோத்தியைத் தன் தலைநகராகக் கொண்டு கோசலநாட்டை ஆண்டுவந்தான் அவன் ஆட்சிக்காலத்தில் ஒருநாள் வசிட்ட முனிவர் முனிவர்குழாம் புடைசூழ அரசவையை அடைந்தார். அரசன் எதிர்கொண்டு அழைத்து வந்து உயர்ந்த ஆசனத்திலே எழுந்தருளச்செய்து வணங்கி, 'முனிவர் பெருமானே! காவிரியின் இருகரைமருங்குமுள்ள எண்ணிலாத் தலங்களின் பெருமை அனைத்தையும் விளக்கி உரைத்தனை; அவற்றுள்ளும் நினைத்தவுடனே முத்தி அளிப்பதாயும், மூர்த்தி தலம் தீர்த்தம் இம்மூன்றாலும், சிறந்ததாயும, எல்லாத்தலங்களையும் விடப் பன் மடங்கு சிறந்ததாயும் உள்ள தலம் எது? அதனைப் பற்றி விரிவாக உரைத்து அருள்செய்வாயாக' என வேண்டிக்கொண்டான்.

வசிட்டமுனிவர் புன்முறுவல் பூத்து, அங்ஙனமாயின், மாயூரம் என்றொரு தலம் உண்டு. ஆயிரமானாலும் மாயூரமாகாது என்று சொல்லுவார்கள். இதற்கு இணையான தலம் எதுவுமேயில்லை. ஐயனே! சிவபுராணம் பத்து அவற்றுள் பிரமாண்டபுராணத்தும் ஆக்கினேய புராணத்தும் இந்தத் தலமான்மியம் சொல்லப் பெற்றுளளது. அதனைச் சொல்கின்றேன்; அனபுடன் கேட்பாயாக;

இந்தத் தலத்திலேதான் பிரமன் சிவபெருமானைப் பூசித்து அருள்பெற்றான. தக்கன் சிவனை மதியாது யாகஞ்செய்ய, வீரபத்திரக்கடவுள் யாகத்தை அழிக்க,

உமையம்மை தக்கன்மகளாக இருந்த தன்னுரு நீத்து மயிலுருக்கொண்டு இறைவனை வழிபட்டு உய்ந்தனள். இறைவன் இடபாரூடராகக் காட்சி வழங்கினார்: உமையம்மை. திருமால் முதலிய பலரும் விரும்பிய வரங்களைத்தந்து 'வள்ளல்' எனப்பெயர் பெற்றனர், தலப்பெருமை, தீர்த்தமகிமை முதலியவற்றையும் வசிட்டமுனிடனிவர் விளங்க உரைத்தார். திலீபனும் அன்புடன்கேட்டு, அத்தலத்தையடைய விரும்பி, வழியிலுள்ள பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சோழநாட்டை அடைத்து, காவிரிக்கரையில் உள்ள மாயூரத்தில் துலா மாசத்தில் முனிவர்களுடனே நீராடிப் பல தானங்களையும் செய்தான் கோயிலுக்குப் போய் அகத்திய விநாயகர் முதலிய பல கடவுளரையும் வணங்கினுன்; அம்மையாரையும் வலம் வந்து துத்தான்: அங்கேயே சில நாள் வசித்து வந்தான்; ஆலயத்தைப் புதுக்கினுன்; திருவிழாக்களை நடத்தினுன்; பின் அயோத்தியடைந்து பன்னெடுநாள் ஆட்சிபுரிந்து சிவலோகம் அடைந்தான். அத்திலீபன் வசிட்டரிடம் கேட்டவண்ணம் மாயூர மகிமையையான விளக்கிச்சொல்வேன் என்று சூதர் நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்களுக்குச் சொல்லியருளினுர்.

பிரமன் சிருட்டிபெற்றது

முன்னெரு கற்பத்துத் தொடக்கத்தில் திருமால் உந்தியந்தாமரையில் தோன்றிய பிரமன் திருமாலை வணங்கி, அடியேன் செய்யும் பணியாது? என்று வினுவினுன். பிளளாய்! உனக்கும எனக்கும் தலைவன முக்கணிறைவன; ஆதலால் அவனை நோக்கி நீ தவம் செய்க; அனைத்தையும் படைக்கும் ஆற்றலைப் பெறுக. என்றனன்.

பிரமன் அவ்வண்ணமே மாயூரத்தில் பதிறுயிரம் ஆண்டுத்தவம் செய்தலும், இறைவன் இடபாருடராய் உமாதேவியாரொடு வந்து காட்சி வழங்கினர். பிரமன் அடியேற்குப் படைக்கும் ஆற்றலைக் கைவரச்செய்க என்று வேண்டிக்கொண்டான்.

இறைவன்' உன் விருப்பமிதுவாயின் இக்காட்டில் நமது சிவலிங்கத் திருமேனியொன்று விளங்குகிறது. அதனை விதிப்படி நீராட்டி வழிபாடு செய்க. உனக்கு அனைத்தும் கைகூடும். அன்றியும் இவ்வனம் இன்று தொட்டுப் பிரமவனம் எனப்பெயர் பெறும். நீ இங்கு ஓர் அழகிய நகரத்தையும் அதன் நடுவில் ஆலயத்தை யும் படைப்பாயாக. அந்நகரம் பிரமபுரம் என உன் பெயர் பெற்று விளங்கும், இங்கேயுள்ள நம் உருவம் பிரமபுரீசர் எனவும், தீர்த்தம் பிரமதீர்த்தம் எனவும் வழங்கும்' என்று கூறி மறைந்தனர்.

பிரமன் சிவனுணையைத்தாங்கி வனம் முழுவதும் தேடினன்; சிவலிங்கத்திருமேனி ஒன்றைக் கண்டான்; வணங்கினன்; தோத்திரித்தான்; நகரமும் கோயிலும் கட்டினன்; நாடோறும் விதிப்படி வழிபட்டுவந்தான் இறைவனும் அவன் விரும்பிய வண்ணம் வரம் கொடுத்தருளினர். பிரமனும் சிருட்டியை ஒழுங்காகச் செய்து வந்தான்.

தக்கன் யாகம்புரிந்தது

சிவபெருமான் திருவருளால் பிரமன் சிருட்டியை விரைந்து செய்தான். ஏழுமுனிவர்களைப் படைத்தான். தக்கன் முதலிய துணைப்பிரமர்களையும் படைத்தான். அவர்களில் தக்கன் உமாதேவியையே மகளாகப் பெற்று இறைவனை நாம் மருமகனுகப் பெற வேண்டும் என்று விரும்பினன். அவ்வாறே இறைவன்

அருள. தக்கன் சிவபெருமானை மருமகன்தானே என்றெண்ணி அவரை நீக்கி வேள்வி ஒன்று இயற்ற, உமாதேவியார் தந்தை அழையாமலே அங்குவர. தந்தை அவமதிக்க, உமாதேவி தாட்சாயணி என்ற பெயரையுந்தாங்க விருப்பம் இன்றித் தவயோகத்தால் தன்னுரு நீத்துப் பிரமவனத்தில் மயிலுருவம் தாங்கி இறைவனைப் பூசித்துத் தவம் இயற்றி வந்தாள் இறைவன் அம்மையின் பூசனைக்கு இரங்கி, மயிலுருவம் நீங்கிப் பண்டைத் தெய்வநல்லுரு எய்தித் தம் இடப்பக்கத்தே வாழத் திருவுளம் பற்றினர். அம்மை, இறைவா ! இத்தலத்து எய்தினர் எப்பாவிகளாயினும் அவர்கள் அவற்றின் நீங்கி நற்கதி பெற்று உய்யத் திருவுளம்பற்றுக என வேண்டிக்கொண்டாள்.

தக்கன் தன் தவறுதலுக்காக வருந்தித் திருக்கருப் பறியலூரை விட்டு மாயூரம் வந்து பிரமதீர்த்தத்திலே நீராடி, திருநீறுமுதலிய சிவவேடப் பொலிவுடன் மாயூரநாதரைப் பூசித்து வந்தான். இறைவன் வெளிப்பட்டு. இந்திரன் முதலான தேவர்கள் அனை வரும் போற்ற, வரங்கள் பலவற்றையும் தந்து வள்ளலார் என்னும் நாமம் தாஙகினர். தக்கன் எல் லாப் பாவங்களும் நீங்கி,தன் இருப்பிடஞ்சார்ந்து சிறு விதி என்னும் பெயருக்கேற்பப் படைததலைச் செய்து வந்தான்.

தேவி வழிபட்டது

மயிலுரு நீங்கி மகேசனின் இடப்பாகத்து எழுந் தருளி அன்பர்களுக்கு அம்மையப்பராகப் பேரருள் வழங்கத் திருவருள் சுரக்கும் பெருமாட்டி, இறைவன் மாயூரநாதனை வேதாகமவிதியின்படி பூசை செய் வதற்கு எண்ணினள்.

அநிந்திதை முதலிய தோழிமார்களையும் சிலதியரையும் மலர் எடுக்கவும், திருமஞ்சனம் சேர்க்கவும், சந்தனம் முதலியன அரைக்கவும் சோடச உபசாரங்களைத் துலக்கிச் சேர்க்கவும் நிவேதனம் சமைக்கவும் அபிஷேகத் திரவியங்களைத் தொகுக்கவும் திருத்தவுமாகப் பணித்தாள். தான் பிரமதீர்த்தத்திலே நீராடி விபூதி உருத்திராக்கம் தரித்துக்கொண்டு இறைவன் சன்னிதிக்குச்சென்றாள். அனுக்ஞைபெற்று, புண்யாக வாசனம் செய்து, பஞ்சகவ்யம அமைத்துப் பூசித்து நவகும்பங்களமைத்து, அவற்றுள் இறைவனுதியரை ஆவாகனஞ்செய்து பூசித்து, அக்கினிகாரியம் செய்து விநாயகர் முதலான துவார தேவதைகளைப் பூசித்து, தேவர்கள் மலர்மாரி பொழிய கர்ப்பக்கிருகத்தினுள் புகுந்தாள்.

பின், கங்கையைப் பூசித்து பூதசுத்தி தானசுத்தி மந்திரசுத்தி திரவியசுத்தி இலிங்கசுத்தியாகிய ஐவகைச் சுத்திகளையும் அன்போடு செய்து, பாத்தியம் ஆசமனம் அருக்கியம் இவற்றையமைத்து, ஆதாரசக்தி முதலாகச் சத்தி மண்டலம் வரை பூசித்து ஆவாகனம் தாபனங்கள் செய்து, முப்பத்திரண்டு அங்கங்களையும் நியாசம் செய்துசந்நிதான சந்நிரோதன அவகுணடனங்களும் செய்து, தேனு முத்திரை முதலான முத்திரைகளும் கொடுத்து பிறகு பாத்திய ஆசமன அருக்கியங்கள் கொடுத்து, வாத்தியங்கள் ஒலிகக, எணணெய், நெல்லி முள்ளிப் பொடி, மஞ்சள்பொடி, பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தம் நெய், பால, தயிர், தேன், சர்க்கரை, வாழைப்பழம் பலாப்பழம், மாம்பழம், நாரத்தம்பழம், எலுமிச்சம் பழம். மாதுளம்பழம், தமரத்தம்பழம் இவற்றன்சாறு, இளநீர். அன்னப சந்தனம் தபனம், கங்கை முதலிய டணணரிய நீர், வில்வக்குழம்பு. சகத்திரதாரை, கவய சிருங்கம், வலம்புரிசசங்கு இவற்றைக் கொணடு

முறையே நீராட்டுவித்து, இடையிடை சுத்தநீராட்டி, நிவேதனம் செய்து கடைசியாக ஒற்றுடை இட்டு, பரிவட்டம்சாத்தி, பூணூலணிவித்து, திருவாபரணம் சாத்தி, விபூதி அணிந்து, சந்தனம் சாத்தி, பூமாலைகள் புனைவித்து, தூபதீபம் கொடுத்து அதற்கு மேலாகச் சுதத அனனம், பருப்பு, நெய், சர்க்கரைப் பொங்கல், பாற்சோறு, எள்ளன்னம் புளிச்சாதம் முதலியன நிவேதித்து. அருக்கியம் கொடுத்து, தாம்பூலம் முதலிய முகவாசங்களை நிவேதித்து, தூபம் தீபம் முதலான சோடச உபசாரங்களையும செய்து, மலர்களைத் தூவி, நீராஞ்சனம் சமர்ப்பித்து வழிபட்டுவந்தாள்.

அங்ஙனம் வழிபட்டுவரும் நாளையில் நாடோறும் ஓர் ஆண்மயில் களிப்போடு அகவிக் கொண்டு பக்கத்தில் நிற்கும். ஒருநாள் அம்மயில் வரவில்லை மயிலம்மை 'யாம் என்ன பிழை செய்தோம; எளிமையில் காட்சி வழங்கும் இம்மயில் வந்திலதே! இப்பாவத்தை யான எங்குச்சென்று கழிப்பேன்'எனக் கவன்றிருந்தனர். எங்ஙனமாயினும் அதனைக்காண்பேன் என்று மீட்டும் தீவிரதர அன்புடன் விதிப்படி பூசித்தனர். அப்பூசையில் அந்தரியாக பூசையைச் செய்து கண்விழித்தவுடனே ஒரு சரக்கறை தெரிந்தது. அங்கே இறைவழிபாட்டிற்கு வேண்டிய அனைத்தும் தோன்றின. இவர் வழிபட்ட பொருள்கள் யாவும மாமரத்தின அடியிலுள்ள சிவலிங்கப் பெருமானபக்கல் விளங்கக் கண்டார். அம்மை அதிசயித்துப் பிரமலிங்கத்தின்பக்கல் சேர்ந்தார்: இருமேனியும் ஒருமேனியே என்பதுணர்ந்தார்: ஆயினும் நம்மோடு என்றும் இடைவிடாதிருந்த மயில் எங்கே போயிற்று? அதனை அறிந்தாலன்றி எனதுயர் நீங்காது என்று எண்ணி வருந்தினர்.

இங்ஙனம் நிகழுநாளையில் ஒருநாள் கருணை வள்ளலாகிய கண்ணுதற்பெருமான் அம்மைக்கு கனவில் காட்சிவழங்கி, நம் எதிருள்ள இத்தீர்த் தத்தில் மூழ்குக என உத்திரவளித்தார். அம்மையும் அவ்வாறே செய்ய மயிலுருவம் நீத்துத் தெய்வ உருவுடன் திகழ்ந்தனர்; இறைவனை வணங்கினர் இறைவன், உமையே! நின் பூசைக்கு உகந்தோம்; உம் பாவங்கள் யாவும் ஓடின; வேண்டிய வரங்களைக் கேள் என்றார். அம்மை இனி இத்தலம் கௌரீ மாயூரம் என்று வழங்கப்பெறுதல் வேண்டும்; தேவர்களனை வரும் இங்கேவந்து வழிபட வேண்டும்; இத்தலப் பெயரைச் சொன்னவர்களுக்கு எல்லா மகிழ்சசியும் நிறையவேண்டும்; இந்தச் சிவலிங்கத் திருமேனியிட மாகத் தேவரீர் என்றும் நின்று அருள்சுரத்தல் வேண்டும்; துலா மாசம் முழுதும் விழா நடத்த எண்ணினேன்: அது நிறைவேற வேண்டும்; அம்மாசம் முழுமையும காவிரியில் நீராடினவர்க்கு அருள்புரியவேண்டும என்று பிரார்த்தித்தார். திருச் செவியேற்ற இறைவன் அவ்வண்ணம் அருள் பூத்தனர்.

வள்ளலாரானது

தக்கன் யாகத்தில் தண்டிக்கப்பெற்ற தேவர்கள் முனிவர்கள் யாவரும் கருப்பறியலூரை விட்டு, தக்கன் யாகத்தில் கலந்து சிவநிந்தகன் சோற்றை உண்ட பாவக் கழிவிற்காகப் பூசை செய்ய எண்ணிக் கௌரீ மாயூரம் அடைந்தனர்; பிரதம தீர்த்தத்தில் நீராடினர்; ஆகமவிதிப்படியே மாயூரநாதனை வழி பட்டனர். மாயூரநாதரும் அவர்கள் செய்த தீமைகளைப் போக்கி, அவரவர்களுக்கு உரிய பழைய கடமைகளைச் செய்துவருமபடி அவ்வத் தானத்து அவரவர்களை நியமித்தனர். இவ்வண்ணம் தேவர்களுக்கு வரமீந்த

வள்ளலாராதலின் 'வள்ளலார்' என்னும் திருநாமம் அன்றுமுதல் இறைவற்கு வழங்கலாயிற்று.

தேவி ஆராதனை செய்தது

அஞ்சல்நாயகி, வள்ளலைப் பூசிக்கத் திருவுள்ளங் கொண்டு ஆகமவிதிப்படி பூசித்து. சிவத்தியானத்து எழுந்தருளியிருந்து. அனைவர்க்கும் திருநீறு வழங்கி இறைவன் திருமுன் நிற்க, இறைவன் அம்பிகையே! முன்னொருகால் வந்த மயிலுக்கு அபயம் கொடுத்தனை; ஆதலால் நீ அபயாமபிகை அல்லது அஞ்சல்நாயகி யென்ற நாமத்துடன் எம்மோடமர்ந்து அன்பர்களுக்கு அருள்பாலித்து வருவாயாக எனத் திருவாய் மலர்ந்து பிரமலிங்கத்துள் மறைந்தருளினர்.

திருநடனம் ஆடியது

இறைவி சிவபெருமானது திருவருளைப்பெற்று இவ்வண்ணம் எழுந்தருயிருக்கும்போது ஒருநாள் வள்ளல் பெருமானே! முன்னொருகால் மயிலுரு வாக என்பக்கல் நடனமாடினை. ஆனல் அப்போது மத்தளம்முதலிய பக்கவாத்தியங்களின்றி நடனமாடினை இன்று தேவர்களனைவரும் கண்டு களிகூர மத்தளம் முதலியவற்றுடன் திருநடனம் செய்தருள வேண்டும் எனப்பிரார்த்தித்தார்.

இறைவனும் அவ்வாறே ஆகுக என வரமீந்து, நந்தியம் பகவானைக்கொண்டு தேவர்கள் அனைவ ரையும் திருநடனங்காண வரவழைத்துக் கௌரீ தாண்டவம் என்னும தாண்டவத்தை ஆடியருளினர். பின்னர் அனைவருக்கும் ஞானம்மீதூர ஆனந்த தாண் டவமும் செய்தனர். தேவர்கள் அனைவரும் அதுகண்டு உய்ந்தனர். இவ்வண்ணம் இத்தலத்தில் கௌரீ

தாண்டவ தரிசனம் செய்தோர் அடையும் பேறு அளவிட்டுக்கூறயாரால் இயலும்? இத்தாண்டவத்தைக் கண்டு களித்த தேவர்கள் பெருமானை நோக்கி இத்தலத்தில் தேவரீர் திருமணக் கோலங்கொண்டு திருக்கல்யாண மகோற்சவங் கொண்டருளின் அடியேங்கள் கண்டு உய்வோம் என்று பணிவுடன் பிரார்த்தித்தனர் அவ்வாறே யாகுக! எனப்பெருமான் இசைந்தனர்.

திருமணம் புரிந்தருளியது

தேவர்கள் அனைவரும் ஒருங்குகூடி, கௌரீ தாண்டவ திருநடனங் கும்பிடப்பெற்ற நாம் திருக் கல்யாண வைபவத்தையும் தரிசிக்கும் புண்ணியம் செய்தோம்: நாம் மட்டுமா? இந்த ஐப்பசிமாசமும் கௌரீ மாயூரநாதசுவாமி திருமணம் கொண்டாடும் மாசமாகப் பெரும் புண்ணியம் செய்திருக்கின்றது என்று கூறி. விசுவகன்மாவை அழைத்து அழகான திருமணமண்டபம் கட்டச்சென்ஞர்கள அவனும் அழகுநிரமபிய, வைத்தகண் வாங்க இயலாத மண்ட பத்தைக் கட்டி முடித்தான் திருமணத்திற்கு வேண்டிய எல்லாம்இனிது நிறைவேறின. தேவர்கள் முனிவர்கள் சிவனடியார்கள் முதலிய அனைவரும் வந்தனர் பாமபணி பரமனை மணியணிபூட்டி மணப்பந்தர் ஏற்றினர். உமையம்மையையும் உடனிருத்தினர். பிரம தேவன் அக்கினிகாரியம் செய்தான. திருமால் தத்தம் செய்து கொடுத்தார். யாக குண்டத்தில் தீ வலஞ் சுழித்து எரிந்தது. திருமணம் இனிது நடைபெற்றது தேவர்களும் அடியார்களும் இமயமலையில் கண்ட காட்சியை இன்றும் பெறறோம் என்று உவகை பூத்தனர்: பூமாரி பொழிந்தனர்: வணங்கி வாழ்த்தினர் பின் இடபதீர்த்தத்தில் நீராடி விருந் துண்டு இருப்பிடத்தைச் சார்ந்தனா.

23

யானையுரித்தது

மாயூரத்தின் தெற்கே தாருகாவனம் என்றொரு வனம் உண்டு. அங்கே கன்மமே பிரமம்: கடவுள் வேறின்று என்னும் கொள்கையையுடைய முனிவர்களாகிய எண்ணாயிரம் பிராமணர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் மனைவியர்களும் கற்பிலும் பொற்பிலும் நாமே சிறந்தோம்: நமக்கு ஒப்பாவார் உலகில் யாருமில்லையெனத் தருக்கியிருந்தனர். இருவகையார் செருக்கும் தலையெடுத் திருப்பதைத் திருத்தத் திருவுளங்கொண்டு சிவபெருமான் பிட்சாடனர் திருக்கோலமாக முனிபன்னியர்கள் இருக்கின்ற விடுகளின் பக்கத்தே எழுந்தருளினார். இறைவனது ஆணையின்வண்ணம் திருமால் மோகினி அவதாரம் எடுத்து முனிவர்கள் கூடியிருக்கிற வேள்விச்சாலை பக்கம் சென்றார். முனிவர்களும் அவர்கள் பன்னியரும் பிட்சாடனரையும மோகினியையும் கண்டவுடனேகாமபர வசராகி, அறிவிழந்து கற்பிழந்து, யானையுண்ட விளங்காய் போல் ஆனார்கள்.

முனிவர்கள் மோகினியைப் பின்தொடரலாயினர். அவர்கள் பன்னியர்கள் பிட்சாடனரைக் கலைகுலைய - வளைகுலைய - அணிகழலப் பின்தொடர்ந்தனர். இந்த நிலைகண்ட முனிவர்கள் சிறிது தெளிந்து தம்நிலையை உணரார் ஆயினும் தம்பத்தினியரின் நிலையைக்கண்டு செய்வது இன்னதென்று அறியாமல் தவித்து, 'கூடி யோசித்து. பிட்சாடனரைக் கொல்ல ஆபிசார ஓமம் செய்தனர். ஓம குண்டத்திலிருந்து பெரிய மதயானை யொன்று ஆரவாரித்துக்கொண்டு வெளிவந்தது. அந்த யானையைச் சிவபெருமான்மேல் ஏவினர். பெருமான்அதன் அடிவயிற்றில் தமது கூருகிராற்கீறிப் பிளந்து அதன் தோலைப் போர்த்திக் கொண்டார்.

உமையம்மை பேருவகைபூத்தாள். முனிவர்கள் கன்மம் கடவுளன்று; எல்லாம் வல்லவன் சிவனே; அவனருள் வழியே அனைத்தும் இயங்குகின்றன என்பதை யுணர்ந்து இறைவனை வழிபட்டனர்; தோத்திரித்தனர், இறைவன் உங்கள் செருக்கும் உங்கள் பத்தினிமார் செருக்கும் வழுவிய ஊராதலின் இத்தலம் வழூஊர் எனப்பெயர் வழங்குவதாக; இதுவும் எம்முடைய வீரட்டங்களுள் ஒன்றாக விளங்குக; நாம் இங்கு என்றும் எழுந்தருளிப் பேரருள் வழங்குவோம்' என்று திருவாய் மலர்ந்தருளிச் சிவலிங்கத் திருமேனியாகவும் பிட்சா டனத் திருமேனியாகவும் எழுந்தருளினர்.

இத்தலத்தைப்போல கௌரீ மாயூரத்தைச் சுற்றி ஓர்யோசனை தூரத்திற்குள் திருச்செம்பொன்பள்ளி திருநனிபள்ளி, திருக்கருப்பறியலூர், வழூஊர் முத லிய தலங்கள் விளங்கும்.

தலவிசேடம்

எண்ணவுங்கூடாத பெரும்பாவங்களைச் செய்த வர்கள் இறைவனைப் பூசித்தால் அப்பாவங்கள் நீங்கும். இறைவனைப் பூசிக்கத்தக்க தலம் இதுவாம் என்று தேர்ந்து பூசித்தலே சிறந்தது. அங்ஙனம் தேரின் இம் மாயூரத்திற்கு ஒப்பான தலம் எங்குமில்லை எனலாம். இந்தத்தலத்தில் நோன்பு, உபவாசம், பூசை, தீர்த்த ஸ்நானம், தானம், தவம், செபம் இவைகள் செய்யின் பெரும்பயன் சித்திக்கும். பல சொல்லுவானேன்; இங்குள்ள குளங்கள் யாவும் சிவதீர்த்தம் சிலைகள்யாவும் சிவலிங்கம் இங்கு வசித்தோர் அனைவருமே சிவனடியார்கள். அவர்கள் கயிலையை அடைவார்கள்.

இத்தலத்திலிருந்து அடியார்கட்கு மாகேசுரபூசை செய்பவர்களின் பெருமை இறைவனாலும் சொல்ல முடியாதது.

கவுண்டினியர் வழிபட்டது

கங்கைக்கரையில் ஒருதவச்சேரியில் கவுண்டினிய மறையவன் வசித்து வந்தான். அவன் ஒரு நாள் யாகத்திற்கு வேண்டிய சமித்து ஒடிப்பதற்காக வனத்திற்குச் சென்றான். அங்கே ஒரு பாழ்ங்கிணறு இருந்தது, அதிலிருந்து கூகூ என ஒரு பயங்கரமான ஒலி கேட்டுக்கொண்டேயிருந்தது, மறையவன் அது என்ன ஒலி என்று அறியக் கிணற்றின் அருகில் சென்றான. அப்பா! நான் உன் குலமுதல்வன்; உன் குலப்பிதிரு தேவதை; பலவகைப் பாவங்கள் செய்தமையால் நான் பல்லூழி காலமாக நரகில் கிடந்து வருந்துகின்றேன்; என்னால் இத்துன்பம் பொறுக்க முடியவில்லை; நீ சிறந்ததோர் தலத்திற்குச் சென்று தீர்த்தம் ஆடி சிவபூசை செய்து, தானதருமம் செய்யின் நான் நரகிலிருந்து மீளுவேன்; என்னை எப்படியாவது கரையேற்றுக எனக்கதறியது. அதைக்கேட்ட மறையவன் வீட்டிற்குச் சென்று யோசித்தான். சிறந்த தலம் மாயூரமே என்று நாரதர் வாயிலாக அறிந்து வந்து விதிப்படி அவையனைத்தும் செய்து ஒருநாள் இங்குத்தங்கியிருந்தான் பிதிரர்கள் அனைவரும் நரகத்தைவிட்டு வெளியேறித் துன்பம் நீங்கித் தன் குலத்து மகனைவந்து கண்டனர். தம்பீ! இத்தலத்தில் நீ இயற்றும் தவச்சிறப்பால் யாங்கள் உய்ந்தோம்; நீ நெடுங்காலம் சிவபுண்ணியச் செம்மலாக வாழ்க என வாழ்த்திச் சிவலோகம் சார்ந்தனர். மறையவன் மகிழ்ந்து பலநாள் வாழ்ந்திருந்தான்.

26

யோகவித்தமன் வழிபட்டது

கங்கைக்கரையில் யோகவித்தமன் என்னும் மறையோன் வாழ்ந்துவந்தான். அவனுக்குச் சண்டியென்ற மனையாளும், பல பிள்ளைகளும் இருந்தனர். அவன் மிக நல்லவனாயினும் முன்செய்த பாவத்தால் வறுமையுற்று வாடினன்; தவஞ்செய்து வறுமையை நானபோக்கிக் கொள்வேன் என்று பிரமனை நோக்கித் தவஞ்செய்தான். பிரமனும் வெளிப்பட்டு அந்தணர் பெரும! உனக்கு வேண்டும் வரம் யாது? என்று வினவினன். அந்தணன் வணங்கி, பெருமானே! நான் வறுமையால் வாடுகிறேன்; அதுநீங்கச் செல்வம் அருளுக என்று வேண்டினன். பிரமன் புன்முறுவல் பூத்து உனக்குப் பெருந்திருவளித்தோம்; நீயும் நுகர்ந்து மற்றவர்கட்கும் வழங்கி வாழ்வாயாக என்று கூறி மறைந்தான். கேட்ட மறையவன் மகிழ்ச்சியுடன் வீடுசேர்ந்தான்.

மறையவன் ஒருநாள் கோதாவரியை அடைந்து நீராடினன். பக்கத்தில் கரையிடிந்து வீழ்ந்தது அதனை அவன் உற்று நோக்கினன். அங்கே மேரு மலையைப்போலப் பொற்குவியல் இருக்கக் கண்டான். அவற்றை அப்படியே அள்ளி வீட்டிற்குக் கொணர்ந் தான். பிரமன் கொடுத்த வரத்தின் வண்ணம் பற்பல அறங்களையும் செய்துவந்தான். இது அவன் மனைவி சண்டிக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய பிள்ளை களுக்கும் இது பிடிக்கவில்லை. மறையவன் மனம் பொறுத்தவனாய் அவர்களை வெறுத்து மாயூரம் வந் தடைந்தான். மாயூரநாதரை விதிப்படி வழிபட்டுத் தானங்கள் பலவும் செய்தான். அங்கேயே பலநாளி ருந்து பின்பு சுவர்க்கம் பெற்றான்.

சுசன்மன் வழிபட்டது

நான்கு வேதங்களையும் கற்று நல்லொழுக்கத்தில் தவறாத சுசன்மன் என்ற வேதியன் ஒருவனிருந்தான். என்ன படித்தும், எவ்வளவு ஒழுகியும் அவனுடைய மனம் அமைதியுறவில்லை. இந்திரனை நோக்கித் தவம் செய்தான். இந்திரன் வெளிப்பட்டு, அந்தணர் பெரும! நீ அமைதியான சூழலை அடைந்தாலல்லது உனது மனம் அமைதியுறாது; ஆகவே அமைதியான இடம் - தெய்வீகத் தலம் - சிவத்தலம் - கௌரீ மாயூரம் என்பது ஒன்றுதான். அது காவிரிக்கரை யிலே இருக்கின்றது. அங்கே நீ சென்று மாயூர நாதரை வழிபடின் சித்த சாந்தியுண்டாகும் என்ற னன. அவன் ஆணைப்படி அந்தணன் மாயூரம் அடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி இறைவனை வழி பட்டு வந்தான். அதனால் அவன் சித்த சுத்தி பெற்றுச் சிவலோகம் சார்ந்தான்.

காகபூசை உரைத்தது

மேருமலையின் ஒருபக்கத்தே ஓராலமரம் உண்டு. அதன் பொந்தொன்றில் ஒரு காகம வசித்து வந்தது அக்காகம அனேக கற்பங்கள் கழிந்தாலும் ஒரு கணம் போல அதற்குத் தோன்றும். அத்தகைய காகத்தை வசிட்டர் முதலிய முனிவர்கள் கண்டனர் உனது வரலாறு என்ன என்று வினவினர். காகம் சொல்லிற்று ; என்பெயர் புசுண்டர். நான் பல காலம் மாயூரத்தில் வசித்து வந்தேன், மாயூரநாதர் அருள் சுரந்து அடியேனை நோக்கி நீ பலகாலம் காக வடிவுடன் கற்பம பல கண்டு ஞானியாக வாழ்வா யாக என்று வரங்கொடுத்தார். அதுமுதல் நான் இவ்வடிவம் தாங்கி இங்கே வாழ்ந்து வருகின்றேன் நான் பல கற்பங்களையும் கண்டேன், என் மேனியி

லிருந்து ஒரு உரோமங்கூட உதிரவில்லை. எனக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தது போல அத்தலம் பலர்க்கும் கொடுத்திருக்கிறது. அத்தலத்தில் உமா தேவியார் இருமுறை மயிலாக வந்து பூசை செய்தமையைக் கண்டிருக்கிறேன். பிரமன் ஐந்து முகங்களோடு ஒன்பதுதரம் பூசைசெய்ததையும், ஒரு முகம் இழந்து நான்கு முகங்களோடு பத்துதரம் பூசை செய்ததையும் பார்த்திருக்கிறேன். மாயவன் வெள்ளையாயிருந்ததும் எனக்குத் தெரியும். அவன் கரியனானதும் எனக்குத் தெரியும். அவன் மாயூர நாதரைப் பத்துதரம் பூசித்திருக்கிறான். பரசிவம் என்றோ அன்றே மாயூரத்தலமுமுள்ளது. பரசிவம் கயிலையில் எப்படியோ அப்படியே மாயூரத்தலத்திலும் இருக்கின்றார். எனக்கு இப்படி நெடுங்காலமாக வாழ்வது பிடிக்கவில்லை. ஆதலால் மாயூரநாதரை மீட்டும் வழிபட்டு முத்தி அடையப் போகிறேன் என்றது. இதனைக்கேட்ட முனிவர்கள் யாவரும் மாயூரத்தை அடைந்து இறைவனை வழிபட்டு இருமையின்பத்தையும் பெற்றனர்.

வைரவன் பூசித்தது

மாயூரநாதரின் திருவருளால் சிருட்டி செய்யும் வல்லமை பெற்ற பிரமன் நாமே எல்லாவற்றையும் எல்லாரையும் படைக்கிறோம். நாமேபெரியவன் என்று கர்வம் கொண்டான். அங்ஙனமே திருமாலும் கர்வம் கொண்டான். ஒருநாள் திருமால் பிரமனைப் பார்ப்பதற்காகச் சத்தியலோகம் போனார். பிரமன் தந்தையின் வரவைக் கண்டும் எழும்பவும் இல்லை; வரவேற்கவும் இல்லை. அதனைக் கண்டு கோபித்த திருமால் என்னப்பா! உனக்கு இன்று என்னவந்து விட்டது? என்று வினவினார். பிரமன் அலட்சியமாக நீ பத்துப்பிறவி எடுத்த போது உன்னைப் படைத்தவன்

நான்தானே ; உன்னைக் கண்டு நான ஏன் மரியாதை செய்யவேண்டும் ? என்று பதிலளித்தான். திருமால் அடப்பாவி, நீ எனது மகன் என்பதையும் மறந்தாயா என்று தன் கையால் அவன் கன்னத்தில் ஓரறை கொடுத்தார். அவனும் அறையத் திருமால் தனது தண்டத்தால் பிரமனைப் புடைத்தார். இவர்கள் சண்டையைக் கண்ட திக்குப்பாலகர் ஓடி இறைவனிடம் விண்ணப்பித்தனர்

இறைவன் வயிரவக்கடவனை நோக்கி நீ இவர்கள் செருக்கினை அடக்கிவருக என ஏவினர். வயிரவர் பிரமனின் ஐந்துதலைகளுள் ஒன்றைத் தன் நகததாற் கிள்ளினர். இதனைக்கண்ட திருமால் தம் மனத்துள் மகிழ்ச்சியும் அச்சமும் பொருந்த வைகுந்தம் சென்றார் வயிரவக்கடவுள் அந்தக் கபாலத்தைக் கையில் ஏந்திக் கொண்டே வைகுந்தம் சென்றார்.

வைகுந்தத்திலே விடுவசேனர் வந்து எதிர்த்தார். அவரை வயிரவர் தம் கையிலுள்ள சூலத்தில் தாங்கிக் கொண்டு விஷ்ணுமுன் சென்று அவன மார்பில் குத்தி இரத்ததைத் தம் கபாலத்தில் கற்பகாலம் ஏற்றார். திருமால் மயங்கி வீழ்ந்தார். திருமகள் மாங்கலியப் பிச்சை கேட்கத் திருமாலுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தருளிப் பதவியு மளித்தனர். விடுவசேனனையும் அவன் பதவியில் அமர்த்தினர். அவர்கள் செருக்கு அடங்கித் தத்தம் பதவியில் வாழ்ந்தனர். வயிரவர் காசியை அடைந்து வழிபட்டனர்.

விசுவநாதர், வயிரவ! நாம் எழுந்தருளி யிருக்கும் தலம் இதுவொன்று மாயூரம் ஒன்று. அங்கே சென்று காவிரியிலும் பிரமதீர்த்தத்திலும் நீராடுக; எம்மை வணங்கி உய்க என்று விடுத்தனர். அவ்வறே வயிரவர் மாயூரம் வந்து மாயூர நாதரை வழிபட்டனர்

மாயூரநாதர் சிவலிங்கத் திருமேனியினின்றும் வெளிப்பட்டு வயிரவ! நீயும் உன்னினத்தாரும் க்ஷேத்திர பாலர்களாய் இந்தக் கோலத்தோடேயே இருந்து காத்து வருக என்று பணித்தனர். வயிரவரும் அங்ஙனமே காத்து வருவாராயினர். வடுகனை வழிபட்டோர் எமவாதனை, பேய் பயம் முதலியன எய்தார்.

திருமாலவதாரமூர்த்திகள் பூசித்தது

சோமுகன் என்னும் அசுரன் வேதங்கள் அனைத்தையும் கவர்ந்துகொண்டு கடலில் ஓடி ஒளிந்தான். திருமால் இறைவனது ஆணையின்வண்ணம் மீன்வடிவெடுத்துக் கடலைக் கலக்கினர். சோமுகனைக் கொன்று வேதங்களை மீட்டார். வெற்றிச்செருக்கினல் ஆழியைக் கலக்கி அனைவாக்கும் துன்பத்தை உண்டுபண்ணினர். இதை அறிந்த தேவர்கள் பெருமானிடம் சென்று விணணப்பித்தனர். சிவபெருமான் வலைஞருகி அம்மீனின் வலியை அடக்கினர். அம்மீனின் விழி எலும்பை எடுத்து விரலில் மோதிரமாக அணிந்தார். தேவர்கள் துன்பம் தீர்ந்தனர். திருமால் இறைவனைப் பணிந்து தன் பாவங்களை நீக்கவேண்டினர். சிவபெருமான் ஆணையின்வண்ணம் மாயூரத்திற்கு வந்து பிரம தீர்த்தத்திலே நீராடி இறைவனை வழிபட்டுப் பாவங்கள் நீங்கப் பெற்ருர். காவற்ருெழிலும் கைவரப்பெற்ருர்.

முன்ஞெருகாலத்தில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக கடைந்தார்கள். அவாகள் மத்தாகக் கொணட மந்தரமலை கடற்சேற்றில் ஆழ்ந்தது. தேவர்கள் மந்தரமாகிய மத்தை இழுத்துக கடைய மூடியாமையால் வருநதித் திருமாலிடம் விண்ணப்பித்தனர். திருமால் ஆமையாகி மந்தரமலையின்

அடியில்போய் அடைகல் லாயினர். தேவர்களும் அசுரர்களும் எளிமையாகக் கடைந்து அமுதத்தைப் பெற்றனர். இதனால் ஆமை செருக்குற்றுக் கடலையே கலககித் திரிந்தது. தேவர்கள் பெருமானிடம் விண்ணப்பித்துக் கொள்ள, அவர் தம் மூத்த பிள்ளையாராகிய விநாயகரை நோக்கி அதன் செருக்கை அடக்குக என்று உத்திரவிட்டார்.

விநாயகர் பரதவராகி ஆமையை அழித்து அதனது ஓட்டை இறைவன்மார்பில் அணிவித்துச் சென்றார். திருமால் தாம் செய்த பிழைக்காக வருந்தி, அப்பழி தீர மாயூரம் வந்து நீராடி மாயூரநாதரை வழி பட்டுச் சென்றார்.

பின்னொருகாலத்தில் இரணியாட்சன் என்பவன் தவம்செய்து வரங்கள் பலவற்றைப்பெற்று அவற்றின் வலிமையால் பூமியையே பாயாகச் சுருட்டிக் கொண்டு பிலத்தில் சென்று ஒளிந்தான். திருமால், தேவர்கள் வேண்டுகோளின்படியே வெண்பன்றியாகிப் பூமியை மீட்டு முன்போலாக்கினார். அதனால் அவர் தருக்குற்று உலகமெலாம் நடுநடுங்க உலாவி வந்தார். இறைவன் தேவர்கள் இதனைக் கூறக்கேட்டு, புன்முறுவல்பூத்து, முருகப்பெருமானை நோக்கி 'நீ ஏனத்தைக் கொன்று தந்தத்தைக் கொண்டுவருக' என்று உத்திரவிட்டார் அவ்வாறே முருகப்பெருமானும் வெண்பன்றியைக் கொன்று அதன் வெண்பல்லை எடுத்துவந்து இறை வன திருமார்பில் அணிவித்து மகிழ்ந்தார். திருமால் வருந்தி மாயூரம் அடைந்து இறைவனை வழிபட்டுத் தோத்திரம் செய்தார். இறைவன் 'பிழைபொறுத் தேன; செருக்கு அடங்கி, வைகுந்தத்தில் காந்தல் தொழிலைச் செய்து வாழ்க' என்று அருள்செய்தார். அவரும் அவ்வாறே ஆணைவழி நின்று இனிது வாழ்ந்தார்.

பின்னொருகாலத்து இரணியன் என்பவன் பெருந் தவம் செய்து பலவரங்களைப்பெற்று உலகனைத்தையும் தன்னடிக்கீழ்ப்படுத்தி அலைத்து வந்தான் திருமால் நரசிங்கமூர்த்தியாகி அவனைக் கொன்றார். அதனால் குருதிவெறிகொண்டு உலகத்தை வருத்த. இறைவன் வீரபத்திரரை நோக்கி நரசிங்கத்தை அடக்குக என்று உத்தரவிட்டார். வீரபத்திரக்கடவுள் சரபமூர்த்தியாக எழுந்தருளி நரசிங்கத்தைக் கொன்று தோலையுரித்துச் சிவபெருமானுக்கு அணிந்து சென்றார். திருமால் தான் செய்த பிழைக்கு இரங்கி இப்பாவம் நீங்க யாது செய்வேன் ? என வருந்தினார். பின் இறைவன் ஆணையின் வண்ணம் மாயூரத்திற்கு வந்து வள்ளல் பெருமானின் திருவடியைத் தொழுது பாவம் நீங்கிப் பதவிபெற்று வாழ்ந்தார்.

மற்றொருகாலத்து மாவலி என்னும் மன்னன் உலகெலாம் தன்னடிக்கீழ் அடக்கியாள எண்ணினான்; பெரிய யாகம் செய்தான. திருமால் அவனைக் கொல்ல எண்ணி இறைவன் அருளால் காசிபருக்கும் அவரது மனைவி அதிதிக்கும ஒரு மகவாகத் தோன்றினார். அவர் மிகக் குள்ளமாயிருந்ததால் வாமனன் எனறு அழைக்கப்பெற்றார். அவ்வாமனன் ஒரு நாள் யாக சாலைக்குப்போய் மாவலியிடம் மூன்றடி மண இரந்து பெற்றார். விண்ணளாவ உயர்ந்த வடிவம் எடுத்து மண்ணை ஓரடியும் விண்ணை ஓரடியுமாக அளந்து மற்றோர் அடிக்கு நிலமில்லாமையால் அவன் தலையில் பாதத்தை வைத்து அவனைப் பிலத்திலே அழுத்திக் கொன்றார். அதனால் மிகவும் செருக்குற்றுத் திரிந்தார். இறைவன் வைரவக்கடவுளை ஏவி, திருமால் வலியை வாட்டியழித்து அவனை உரித்து, தோலைச் சட்டை யாக அணிந்தார். முழு எலும்புக் கூட்டைத் தண்ட மாகத் தரங்கினார் திருமால் இறைவனுக்குச் சிரமம்

வரச் செய்த தீமைநீங்க மாயூரம் அடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி வள்ளல்பெருமானை வந்தித்து வாழ்ந்தார்.

தருமன் பூசித்தது

மார்க்கண்டர் என்னும் முனிவர் திருக்கடவூரை அடைந்து மரணத்துன்பம் நீங்கும் வண்ணம் அமுதகடேசரை அனுதினமும் வழிபட்டுவந்தார். அப்போது எமன் முனிவர் உயிரைக் கவரவந்தான். மார்க்கண்டர் இறைவா! நீயல்லது அடைக்கலம் வேறில்லை என்று துதித்தார். இறைவன். துதிக்கு இரங்கிச் சிவலிங்கத்தினின்று எழுந்து எமனை மார்பிலுதைத்து வீழ்த்தினார் எமன் வீழ்ந்து இறந்தான். இறைவன் பூமிதேவியின் வேண்டுகோளுககு இரங்கி அவனை மீண்டும் எழுப்ப, அவன் மாயூரத்தை அடைந்து அங்குள்ள பிரமதீர்த்தத்திலே நீராடி. திருநீறு அணிந்து ஐந்தெழுத்து ஓதி, பெருமானை வழிபட்டுவந்தான. அத்தலத்திற்கு ஈசான திக்கில் ஒருசிவலிங்கம் ஸ்தாபித்துப் பூசிதது வந்தான். மாயூரநாதர் வெளிப்பட்டு, காலனே! நீ வேண்டியவரம் யாதெனவினவினர். எமன் நான் பூசித்த இலிங்கம் என பெயராலேயே வழங்க வேண்டும்; தேவரீர் இந்தச் சிவலிங்கத்திலே எனறும் எழுந்தருளி அருள்செய்ய வேண்டும் என்றுவேண்டிக் கொணடான். இறைவன அவ்வாறே அருளி இத்தலத்தைக் கருதுவாரையும் வழிபடுவாரையும் தீண்டாதே; தீண்டின் உன் ஆக்கமும் ஆட்சியும் எல்லாம் அழியும் எனறுகூறி மறைந்தருளினர். அவனல் ஸ்தாபிக்கப்பட்ட இலிங்கத்தை வழிபடுவோர் எல்லா இன்பங்களும பெறுவர்.

மன்மதன் பூசித்தது

இமயமலைச்சாரலில் இறைவன் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது உயிர்கள் யாவும்

போகம் துறந்தன. இதனை அறிந்த திருமால் மன்மதனை ஏவி மலரம்பு தூவச்செய்தார். இறைவன் விழித்தீயால் மன்மதன் சாம்பலானான். இரதி புலம்பினாள். இறைவன் அவன் உருவிலானாக இரதிக்கு மட்டும் புலப்படுமாறு எழுப்பித்தந்தார். மன்மதன் இறைவனுக்குச் செய்த பெருந்தீங்கை எண்ணி வருந்தி மாயூரம் அடைந்தான். காவிரியில் நீராடி வள்ளலை வழிபட்டுவந்தான். அவன் பூசைக்கு இரங்கி இறைவன் அவனை எரித்த தலம் திருக்குறுக்கை என்ற பெயருடன் வழங்கவும், அது தனது வீரட்டானத்துள் ஒன்றாகவிளங்கவும் அருள் செய்தார்.

தீர்த்த விசேடம்

பாவநாசதீர்த்தம்: இது மாயூரநாதர் திருமுன்பு விளங்குகிறது. பாவக்காட்டை எரிக்கும் செந்தழல் சோலை ஆகையால் இப்பெயர் பெற்றது. இது பரமன் சூலத்தால் தோன்றிய காரணத்தினால் சூலதீர்த்தம் எனவும் முதன்முதல் முதல்வனால் தோற்றுவிக்கப் பட்டதால் ஆதிதீர்த்தம் எனவும், பிரமன்முதல் பல தேவர்கள் வந்து நீராடித் தத்தம் பாவங்களைப் போக்கிக் கொண்டதால் பாவநாசம் எனவும் தருமங்களை அளிப்பதால் தரும தீர்த்தம் எனவும். பொருளைக் கொடுப்பதால் அர்த்த தீர்த்தம் எனவும், இஷ்டங்களை நிறைவேற்றுவதால் காமதீர்த்தம் எனவும் வழங்கப் பெறுகிறது. இதன் கரையில் செபம், தவம், சிரார்த்தம் செய்யின் ஒன்று பலகோடிகளாகப் பெருகிப் பயன் அளிக்கும் இத்தீர்த்தத்தில வருடப்பிறப்பு. உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்கள், மாசப் பிறப்பு, அமாவாசை பௌர்ணமிகள், கிரகண புண்ணியகாலங்கள் இவற்றில் நீராடின் பெரும் புண்ணியமாம்.

அகத்தியர் பூசை செய்தது

அகத்தியர், தனது மாணக்கர் பன்னிருவரோடும் மலையத்திலிருந்து வடதிசை நோக்கி வரும் வழியில் இத்தலத்தின் எழிலையும். இங்கே எழுந்தருளியுள்ள இறைவன் விளக்கத்தையும் கண்டு, இருந்து வழிபட எண்ணினர். நாடோறும், காவிரியில் நீராடி வள்ளல் பெருமானைப் பூசித்துவந்தார்; தோத்திரித்தார்; அங்கு எழுந்தருளியிருக்கின்ற குமாரக் கடவுளையும் பூசித்துவநதார்; சூழவுளள தலங்கள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு பொதிய மலைக்குச் சென்றார். இத்தலத்து அகத்தியரால் அமைக்கப்பட்ட அகத்திய கூபத்தில் நீராடி அவர் பிரதிஷ்டை செய்த அகத்திய விநாயகரை வழிபாடு செய்கின்றவர்கள் எல்லா இன்பங்களையும் எய்துவார்கள்.

கண்ணுவர் பூசித்தது

முன்னொருகால் கண்ணுவமுனிவர் மனைவியோடு கங்கை ஆடுவதற்காகக் காசியைநோக்கி வந்துகொண்டிருந்தார். அப்பொழுது உடல் இளைத்து கறுத்த மாதர்கள் மூவர் இவர் எதிரில் வந்தார்கள். முனிவர் அவர்களைப் புலைமாதர் என எண்ணிக்கொண்டு சற்று விலகிப்போகுமாறு கையசைத்தார் மாதர்கள் சிரித்து நீர் யார்? எங்குச் செல்கிறீர்? என்று வினவினர். அம்முனிவர் என்பெயர் கண்ணுவர் நான் மனைவியோடு காசியில் கங்கை யாடப் போகிறேன என்றார் வந்த மூவருள் ஒருத்தி முனிவா! இவள் கஙகை. இவள் வாணி. என் பெயர் காளிந்தி; உலகமக்கள் அனைவரும் வந்து எங்களில் நீராடிக் கழித்த பாவத்தால் நாங்கள் புலைமாதர் உருக்கொண்டு மாயூரம் சென்று இடப தீர்த்தத்திலே நீராடி எங்களது பாவங்களைப் போக்கக் கொள்ளப்

போகிறேம் என்று தெரிவித்தனர். கண்ணுவரும் பின்தொடர்ந்து சென்றார். எல்லாரும் மாயூரம் அடைந்து அங்கு இடபதீர்த்தத்தில் நீராடி இறைவனைப் பூசித்து, ஒளியான மேனிகளையும் எல்லா நலங்களையும் பெற்றனர். கண்ணுவர் அங்குள்ள மக்களனைவருக்கும் எல்லாரும் பாருங்கள். எல்லாரும் கேளுங்கள்; இவர் மூவரும் கங்கை, காளிந்தி, வாணி என்னும் நதித்தெய்வங்கள்; இடப தீர்த்தத்தில் நீராடித் தம் பாவங்கள் நீங்கப் பெற்றார்கள்; எல்லாம் மாயூரநாதன் பேரருள் என்று வியந்து பாராட்டிப் பின்னும் சிலநாளிருந்து மாயூரநாதனைத் தொழுது தம் இருப்பிடம் அடைந்தார்.

இலக்குமி பூசித்தது

இந்திரப்பிரஸ்தம் என்னும ஊரில் இந்திரதத்தன் என்னும் அந்தணன் இலக்குமிஎன்னும்மனைவியோடு வசித்து வந்தான். அவன்மனைவி அவனைவஞ்சித்து அவன் பொருளை எல்லாம் சுருட்டிக்கொண்டு தனது பிறந்தகத்திற்குப்போய்விட்டாள. அந்தணன் அவள் ஊருக்குச் சென்று அவளைக் கோபித்துக்கொண்டான் அதற்காக அவள் தூக்கிட்டுக் கொணடு இறந்தாள். அதனுல் அவள் பேயாகி அலைந்துகொண்டிருந்தாள். ஒருநாள் வழியிலே ஜாபாலி முனியைக் கண்டாள். ஜாபாலி அவள் வரலாற்றை அறிந்து. பேய்மாதே! நீ மாயூரத்திற்குச் சென்று இடபதீர்த்தத்திலே நீராடி வள்ளலாரை வழிபடு; இந்த ரூபம் நீங்கும்: பாரப் பனியாகி, பிரமதத்தனேடு சேர்ந்து வாழ்வாயாக என்று கூறினர். அவளும் அவ்வாறே பெருமானை வழிபட்டு உணமையுருவம் பெற்று' பிரமதத்தனை மணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தாள்.

37

விசாலன் பூசித்தது

அங்கநாட்டில் சந்திர குலத்தவனான விசாலன் என்னும் ஒரு அரசன் அரசாண்டு வந்தான். ஒருநாள் வைணவ அந்தணர் சிலர் அவனுடைய சபைக்கு வந்து வைணவசமயமே மெய்ச்சமயம்; திருமாலே முழுமுதற்கடவுள் ; ஸ்ரீ வைகுண்டத்து நித்திய சூரிகளாக பகவத் கைங்கரியம் செய்வதே நன்முத்தி ; பாஞ்சராத்திரமே உண்மை உணர்த்தும் ஆகமம் என்று உரைத்துச் சென்றனர். அரசனும் அதனையே மேற்கொண்டவனாகி. அமைச்சர்கள் சொல்வதையும் கேட்காமல் உறுதியாகப் பினபற்றி நடந்தான் ; விபூதி பூசியவர் யாரையேனும் கண்டால் பாம்பைப்போல் சீறுவான். சிவாலாயங்களுக்கு இடையூறுகள் விளைவிப்பான் ; சிவா என்று யாரேனும் சொன்னால் காதுகளைப் பொத்திக் கொள்வான்.

இப்படிப்பட்ட மன்னன் நோயால் வருந்தினான். உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. எமதூதர்கள் அவனைக் கொண்டுபோய் எமதருமன்முன் நிறுத்தினர் சித்திரகுப்தன் இவன் செய்த குற்றங்களைத் தெரிவிக்க எமதருமன் பற்பல யுகங்கள் பலவித நரகங்களில் கிடந்து வருந்தப் பணித்தான். பின்னர் இவன் பேய் உருவம் பெற்றுப் பொதியமலையில் அகத்தியரை அடைந்தான். அவர், சிவநிந்தனாகிய இவனைப் பார்க்கக் கூசினாலும் மனம் இரங்கி இதற்குப் பிராயச் சித்தம் இருக்கின்றது; அதனைக் கேட்பாயாக என்று கூறத்தொடங்கினார்.

முன்னொருகாலத்தில் குபேரனது மாளிகையில் சுசீரவா என்னும் கந்தருவன் வசித்து வந்தான். அவனுக்கு மனோக்கினி என்னும் ஒரு பெண் இருந்தாள். அவள் ஆகாயமார்க்கமாகப் பல இடங்

களைக் காணப் புறப்பட்டவள் விந்துவாவிக்கு நேராகவந்தாள். அங்கு உருசிமுனிவரின பிள்ளை யாகிய மித்திரன். என்பவனைக் கண்டு அவனது அழகில் ஈடுபட்டு மண்ணலில் இறங்கி அவன்முன் வந்துநின்ருள். மிததிரன். இறைவன் திருவருள் கூட்டுகின்றவழி எல்லாம் நடக்கும் என்ருன். அவள் இறைவன் திருவருள் என்றைக்குக் கூட்டுவிக்கப் போகிறது என்று கூறி வலியத் தானே தழுவினுள். முனிவன் நீ பேயாகுக என்று சபித்தான். அவள் இக்கொடிய சாபம் தீரும் உபாயத்தை அருளுக என்று அசிதன் என்னும் முனிவரைக் கண்டு வணங்கினுள். அவர், நீ விரைவாகச் சென்று மாயூரத்து இடபதீர்த்தத்தில் மூழ்கினுல் இந்த உருவம் நீங்கும் என்ருர். அவளும் அவ்வாறே சென்று நீராடி மாயூரநாதரை வழிபட்டு மித்திரன் என்ற முனிவன் முன் சென்ருள். அப்போது அசிதனும் உருசியும் மித்திரனுக்கு அவளை மணம் செய்வித்தனர் ; இதைக் கேட்ட விசாலன் என்னும் பேய் இடபதீர்த்தத்தை அடைந்து நீராடி வள்ளல் பெருமானை வணங்கி வழிபட்டுவரும் நாளில் பேய் உருவம் நீங்கப்பெற்றுச் சிவலோகத்தைச் சார்ந்து வாழ்ந்திருந்தான்.

யானை முத்தி அடைந்தது

முன்ஞெருகாலத்தில் நாரதர் தும்புருவோடு இமயமலைச்சாரலின் வழியாக வந்தார். அவரை ஓர் யானை பார்த்தது. உடனே முன்சன்ம வாசனையால் அவரை அணுகி வீழ்ந்து வணங்கியது. முனிவர் யானையைப் பார்த்து நீ கொண்ட எண்ணம் யாது? கூறுக! என்ருர். யானை ‘‘முன்சன்மத்திலே யாஞெரு பிராமணனுடைய புத்திரன். என்னுடைய பெயர் மாசாந்தன் திருமாலை வழிபட்டு வந்தேன், அப் பொழுது அகத்தியர் முதலிய முனிவர்கள் கயிலா

யத்தை வணங்கச் சென்றுர்கள். அவர்களைக் கண்டு யான் வணங்கவும் இல்லை; எழுந்திருக்கவுமில்லை. அவர்கள் என்னை யானையாகுக எனச்சபித்தனர். அதைக்கேட்டு அடியேன் வருந்திச் சாப நிவர்த்தி அருளுக என்று மன்றுடினேன். அவர்கள் நூருண்டு யானையாகவேயிருக்க; நாரதமுனிவர் இங்கு வருவார்; நீ வணங்கு; அவர் சாபக்கழிவைச் சாற்றுவார்' என்றுகூறிக் கயிலையை நோக்கிச் சென்றுவிட்டார்கள். இன்று தங்களைக் கண்டேன்; வணங்கினேன். நூறு ஆண்டுகள் தீர்ந்தன. ஆதலால் எனக்கு இந்தச் சாபம் நீங்கும் உபாயத்தை அருளுக'' என்று சொல்லிற்று. நாரதர் 'நீ நாராயணனைப் பூசித்ததால் சிவனடியாரைக்கண்டு வணங்கக் கூசினுய்; அதனுல் யானையாயினை; பாவம் தீர மாயூரத்திற்குச் சென்று இடப தீர்த்தத்தில் நீராடி மாயூரநாதரை வழிபடு; அதனுல் மறுமையில் சிவலோகம் சேர்வாய்' என்று உபதேசித்தார். யானை அவ்வாறே சென்று நீராடி வழிபட்டுப் பிராமணனுகிச் சிலநாள் வாழ்ந்து சிவலோகம் சேர்ந்தது.

குதிரைகள் முத்திபெற்றது

அயோத்திநகரத்து இறைவனுகிய திலீபனிடம் இரண்டு குதிரைகள் இருந்தன. உடம்பு முழுவதும் வெளுத்துக் காதுகள் மட்டும் கறுத்திருந்தன. அவன் அவைகளாலே எண்திசையும் வென்று விளங்கினுன். ஒருநாள் அந்தக் குதிரைகளுள் ஒன்று மற்றென்றைப் பார்த்து இம்மன்னன் முற்பிறப்பில் மறையவனுகப் பிறந்திருந்தான்; நான் வணிகனுயிருந்தேன்; இவனிடம் பொன்னைக் கடனுக வாங்கிப் பின்பு கொடுக்காமல் இறந்து விட்டேன்; அதனுல் எருமையாகப் பிறந்து இவனிடம் பத்தாண்டு உழைத்தேன்; பின் குதிரையாக உழைத்து வருகிறேன்' என்றது.

அவ்வாறே மற்றொரு குதிரையும் யான் முற்பிறப்பில் சூத்திரன்; மறையவனுகிய இவன்பால் கடன் வாங்கினேன்; பாதிகூடக் கொடுக்கமுடியவில்லை; அதனுல் ஒரு பத்தாண்டு யானையாக உழைத்தேன்; இப்பொழுது பரியாக உழைத்து வருகிறேன்' என்று கூறி அழுதது. எல்லாமொழியும் உணர்ந்த திலீபன் குதிரைகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்து மனம் இரங்கினுன். வசிட்டரிடம் தெரிவித்தான். வசிட்டர், மன்னர் மன்னு! யாருக்கும் கடனைத் தீர்த்தலே நல்லறமாகும். ஆதலால் இன்றே மாயூரம் சென்று இடபதீர்த்தத்தில் நீராடச்செய்து இவ்வினையைப் போக்குக என்று தெரிவித்தார். அரசன் அவ்வாறே செய்தான் குதிரைகள் இரண்டும் தமது வடிவு மா்றித் தெய்வவடிவங்களாயின; திருக்கோயிலை வலம் வந்து வள்ளல் பெருமானை வழிப்பட்டன. வானேர் பூமாரிபெய்யச் சிவலோகம் சார்ந்தன. இவற்றை நேரே கண்டு களித்த திலீபன் அயோத்தி நகர்க்குச்சென்று நிகழ்ச்சியை வசிட்டமுனிவர்க்கு அறிவித்து இனிது வாழ்ந்திருந்தான்.

கூரமும் கழுதும் முத்திபெற்றது

மாகிஷபதி என்னும் ஊரில் சிங்கத்துவசன் என்ற ஒரு அரசன் அரசாண்டு வந்தான். ஒருநாள் அவன் வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டில் விலங்குகளை வேட்டையாடினுன். வேட்டையாடியதனுல் மிகவும் களைத்துப் பரத்துவாசர் ஆசிரமத்தை அடைந்தான். முனிவர் அப்பொழுது யோகத்திலிருந்தார். தன்னை மதிக்கவில்லை என்று அரசன் சினந்து, அவரை எட்டி உதைத்தான். முனிவர் சினந்து கழுதை ஆகுக எனச் சபித்தார் அவன் கழுதையாகிஅலைந்து திரியும்போது, ஒரு வெண்கல வியாபாரி அதைப் பிடித்து அதன்மேல் பாத்திரச் சுமையை ஏற்றி ஐப்பசி விழாவுக்காக

மாயூரத்திற்கு ஓட்டிச் சென்ருன், கடையில் சரக்குகளை இறக்கிவிட்டு அக்கழுதையை அவிழ்த்து ஓட்டிவிட்டன் அது ஆற்றங்கரையில் புழுதியான இடத்தில் படுத்துப் புரண்டது. அப்பொழுது கழுகு ஒன்றைக்கண்டது. கழுதை கழுகைப்பார்த்து நீ யாரெனக்கேட்க, கழுகு, 'யான் தூமரன் என்னும் வேடன்; விந்தமலைக்காட்டில் குடியிருந்தேன்: வருவார் போவாரை வழிப் பறித்து வயிறு வளர்த்துவந்தேன். ஒருநாள் அகத்திய முனிவர் அவ்வழியே வந்தார் அவரைக்கண்டு வணங்கினேன்; வாழ்நாளில் நான்செய்த புண்ணியம் அது ஒன்றுதான்; அதனுல் முன் பிறவிகளில் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் ஆற்றலை அடைந்தேன்; வழிப்பறி செய்த பாவத்தால் பல நாள் நரகத்துள் வீழ்ந்துவருந்தி இந்தக்கழுகு உருவத்தைக் அடைந்தேன்; அந்தப்பாவத்தைப் போக்கிக் கொள்ள பூமியிலுள்ள தீர்த்தங்கள் எல்லா வற்றிலும் நான் நீராடினேன்; பாவம் தீர்ந்த பாடில்லை; பழைய உருவமும் வந்தபாடில்லை; அதனுல் இப்போது இத்தலத்திற்கு வந்திருக்கிறேன்; இங்கே இடப தீர்த்தம என்ற ஒரு துறை இருக்கிறது; அங்கே நான் முழுகப் போகிறேன்; நீயும் வா' என்று அழைத்தது. கழுதை பின்னே தொடர்ந்து சென்றது. இரண்டுமாக இடப தீர்த்தத்தில் நீராடித் தெய்வ உருவம் பெற்று விளங்கின. திருக்கோயிலிற்குச் சென்று மாயூர நாதரை வழிபட்டு சொர்க்கலோகத்தை அடைந்தன.

பாம்பு முத்தி அடைந்தது

கண்ணபிரான் வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருர். அங்கே ஒரு பெரிய பாம்பைக் கண்டார். அதன் வரலாறு யாது என்று வினவினுர். அப்பாம்பு என் பெயர் நகுடன். நான் நூறு அசுவமேத யாகங்

கள் செய்தேன். தேவலோகத்திற்குப் போக வேண்டு மென்ற விழைவால் எனது பல்லக்கைச் சுமந்துசென்ற ஏழு முனிவர்களைப்பார்த்து, சர்ப்ப சர்ப்ப என்றேன் அவர்கள் என்னைச் சர்ப்பமாகச் சபித்தனர். அன்று முதல் சர்பமாகக் கிடந்து உழல்கிறேன். இவ்வுருவம் நீங்கக் கூடிய உபாயத்தைக் கூறியருளுக, என்று பணிந்தது. கண்ணன் மிகவருந்தி 'நீ சென்று மாயூரத்தில் இடபதீர்த்தத்தில் நீராடினல் இப்பாம்பு வடிவம் நீங்கும்' என்ருர். நகுடன் நான் அவ்வளவு தூரம் எப்படிப் போவது என்று வருந்தினை. கண்ணன் ஒருமலரை எடுப்பதுபோன்று எடுத்து வீசி எறிந்தார். நகுடன் இடபதீர்த்தத்தில் வீழ்ந்தான்; பாம்பு உருவம் நீங்கித் தெய்வ உருவம் பெற்று அஞ்சல் நாயகியையும் மாயூர நாதரையும் வணங்கிச் சொர்க்கம் புக்கான்.

நரியும் குரங்கும் முத்தி பெற்றது

அவந்திபுரியில் இரண்டு சூத்திரர்கள் மிக நெருங்கிய நண்பராக வாழ்ந்து வந்வனர். ஊழ்வினை வயத்தால் இருவரும் இறந்தனர். அடுத்த பிறவியில் ஒருவன் நரியாயினன்; மற்ருெருவன குரங்காயினன். மீட்டும் இருவரும் நட்பாயினர். ஒருநாள் நரியைப் பார்த்துக் குரங்கு, ஏன் இவ்வடிவம் பெற்ருய்? என வினவியது நரி, அந்தணர்க்குப் பொருள் தருவதாகச் சொல்லிப் பிறகு கொஞ்சமும் கொடுக்காததால் இவ்வுருவம் பெற்று, பிணத்தைப் பிடுங்கித் தின்று வாழ்கின்றேன்; அதுகிடக்க; நீயேன் இந்தவடிவம் பெற்ருய்? என வினவியது குரங்கு 'அயலாரின் பொருளைக் கவர்ந்து வாழ்ந்த பாவத்தால் வானர வடிவை அடைந்தேன்' என்றது. இவ்வாறு இரண்டும் வருந்திக் கொண்டிருக்கின்ற பொழுது

காசிபமுனிவர் அங்கு வந்தார். இந்த இரண்டின் துன்பத்தையும் அறிந்தார். வாருங்கள் போகலாம் என்று அழைத்துக் கொண்டு மாயூரத்தை அடைந் தார். இடபதீர்த்தத்தில் முழுகுங்கள் என்று கூறினர். அவைகளும் அவ்வாறே செய்து விலங்கு உரு நீங்கித் தேவவுருவத்தோடு தீர்த்தத்திலிருந்து வெளிவந்தன; காசிபமுனிவரை வணங்கின; தேவலோகம் அடைந் தன; இனிமையாக வாழ்ந்தன.

கங்கை முத்தி அடைந்தது

முன்னொருகாலத்தில் நிருமேதன், பருச்சேபன் என்ற முனிவரிருவர் எல்லாத்தீர்த்தத்திலும் நீராட வேண்டுமென்று புறப்பட்டுவந்தார்கள். அப்போது, மாயூரம் அடைந்து இடபதீர்த்தத்தில் நீராடி மாயூர நாதரையும் அபயாம்பிகையையும் வணங்குக; அதுவே போதுமென்று அசரீரி பிறந்தது. முனிவர்கள் அதைக் கேட்டு மகிழ்ச்சியோடு மாயூரத்திற்கு வருகிறபோது நடுவழியில் பேய் ஒன்று வலிந்து பற்றி உண்பதற்காக வருத்தியது. முனிவர்கள் கோபித்து அதனைப் பார்த்து ஊங்காரம் செய்தனர். உடனே பேய்க்கு அறிவு தோன்றியது முனிவரின் காலில் வீழ்ந்து வணங்கி 'நானொரு அந்தணச் சிறுமி; கங்கை என்பது என் பெயர்; ஏழுவயது வரையில் என்னை வளர்த்துவந்த என் பிதா ஓர் அந்தணர்க்குத் தான மாகக் கொடுத்தார்; பத்து வயதில் பெரிய பெண் ணானேன்; இரண்டு வருடம் வாழ்ந்தேன்; பன்னிரண் டாவது வயதில் என் கணவர் இறந்தார்; விதவை யாய் காசாசைபற்றி அனைவர்க்கும் சோறிட்டு வந்தேன்; காசு கொடாதவர்க்கு ஒரு பிடி சோறும் கொடுக்கமாட்டேன்; இப்படிக் காசாசைப் பிடித்து அலைந்து எண்பது ஆண்டுகள் வாழ்ந்து இறந்தேன்; பேயுடம்பு பெற்றேன்; உம்மால் நல்லறிவு உற்றேன்;

இந்தப்பேய்வடிவம் நீங்கும் உபாயத்தைத் தேவரீர் தெரிவித்தருளவேண்டும்' என் வேண்டிக் கொண்டது. முனிவர்களும் இரக்கமுற்று, நீ என்னோடு வா என்று சொல்லி அழைத்துக்கொண்டு மாயூரம் வந்தார்கள்; இடபதீர்த்தத்தில் மூழ்கச் செய்தார்கள். கங்கையும் பேயுடம்பு மாறி தெய்வ உடம்பு பெற்று மாயூரநாதப் பெருமானையும் அஞ்சல் நாயகியையும் வழிபட்டு நின்மலமுத்தி அடைந்து ஆனந்த வாழ்வு பெற்றாள்.

பூனையும் கிளியும் முத்தி பெற்றது

மந்தாகினிக்கரையில் பரத்துவாசரின் ஆச்சிரமம் ஒன்றுண்டு அதனைச்சூழ அடர்தத பூஞ்சோலை அதில் பல பறவைகள் பயமின்றி வாழ்ந்தன. அவற்றுள் ஒரு கிளி தன் பெடையோடு கூடி இன்பம் துய்த்துக் களைப் பினால் தூங்கியது. அது தூங்குகின்ற நேரம் பார்த்து ஒரு கரும்பூனை வந்து பற்றியது கிளிபயந்து உனக்கு நான் என்ன தீங்கினைச் செய்தேன்; அரசன் இதனைக் கண்டால் உனக்குக் கடுந்தண்டனை கொடுப்பானே; அது தெரிந்தும் நீ இவ்வாறு கொடுமை செய்ய லாமா? உன்னுடைய முற்பிறப்பை யான் சொல்கி றேன். கேள்' என்றது. கேட்டபூனை 'நீ சொல்வது உண்மை; எனது உயர்வு இழிவு இரண்டையும் சொல்' என்றது. 'விதர்ப்பநாட்டில் பிருகத்ரதன் என்னும் அரசனாக நீ வாழ்ந்தாய். கொடுங்கோல் ஆட்சியால் குடிகளை வருத்தினாய். அதனால் இறந்து பல நரகங்களில் கிடந்து வருந்தினாய். பல ஆண்டு கள் கழித்து மண்ணில் ஓர் அயுதம் புழுவாகக் கிடந் தாய். அதற்கு மேல் இப்பொழுது நீ பூனையாக வந்திருக்கிறாய். என்னைப் பிடித்து உனக்கு என்ன பயன்? யானே உனக்கு புரோகிதனாயிருந்த தோஷத்

தால் பல காலம் நரகத்துள் வீழ்ந்து வருந்தினேன் மிகவும் இழிந்தபிறவிகள் எடுத்தேன். இப்போது கிளி யாக வந்திருக்கிறேன். நான் செய்த பாவங்களுக்கு ஓர்தீர்வு தேடிக்கொண்டுதான் இருக்கிறேன். ஒன்றும் தெரியவில்லை என்று கிளி கூறிற்று,

இவைகளின் உரையாடலைக் கேட்டுக்கொண் டிருந்த பரத்துவாசர், ஏகிளியே! பூனையே! நீங்கள் நடந்ததற்காக வருந்தாதீர்கள். நான் சொல்லுவதைக் கேளுங்கள். மாயூரத்தில் இடபதீர்த்தத்தில் நீராடுங் கள். எல்லாத் துன்பங்களும் தொலையும் என்றார். அவர் ஆணையின வண்ணம் இரண்டும் இடப தீர்த்தத்திலே நீராடித் தெய்வ உருவம் அடைந்தன. திருக்கோயிலை அடைந்து மாயூரநாதரையும் அஞ்சல் நாயகியையும் வழிபட்டன. இறைவன் அருளால் அந்த இரண்டும் சொர்க்கம்புக்குச் சுகமாகவாழ்ந்தன.

சயதுங்கன் முத்தி அடைந்தது

காசிநகரத்தில் சயதுங்கள் என்னும் அரசன் நீதி யுடன் அரசாண்டுவந்தான. அவன் வைணவ சமயம் தழுவிச் சைவசமயத்தை நிந்தித்துவந்தான். அந் நாளில் தேவசாமி சாத்திரி என்பவனின் மகனாகிய அரிசாமிஎன்பவன் தனது மனைவியுடன் உறங்கினான். மனைவி அரையில் ஆடையின்றிப் புணர்ச்சியினால் களைத்துஉறங்கினாள். அப்போது மதன வேகன் என்னும் ஒரு கந்தருவன் அவளது உருவழகைக் கண்டு வியந்து அவளைத் தூக்கிச் சென்றான. அரிசாமி விழித்தெழுந்து மனைவியைத் தேடினான். மிக வருந்தினான் அவ்வூரில் பதுமநாபன் என்ற மறையோன் வீட்டில் பிச்சை தா எனப் புகுந்தான். அவனது மனைவி பிச்சை அளிக்க, அவன் அதை எடுத்துக்கொண்டு, குளக்கரையிலுள்ள ஆலமரத்

தினடியில் உண்ணச்சென்றான். அப்போது மேலிருந்து கருடன் ஒரு பாம்பைக் கொத்தித் தின்றுக் கொண்டிருந்தது. பாம்பின் விஷம் இவன் உணவில் சிந்தியது. அந்தணன் அறியாது உண்டான். உடனே உயிர் பிரிந்தது. அதனை அறிந்த பதுமநாபன் கலங்கித் தன் மனைவிக்கு இக்கொடும் பழி வந்துவிட்டதே என அஞ்சி அத்திரிமுனிவரிடம் சென்று அழுதான். முனிவர் அதனை ஆராய்ந்து 'கருடன்கொத்த அதனால் பாம்பு விஷத்தைக் கக்கியது கருடன் பசியால் பாம்பைக் கொத்தியது; உன் மனைவி மன விருப்பத்தோடுதான் அந்தணனுக்குப் பிச்சை கொடுத்தாள்; அதனால் இம்மூவர்க்கும் பாவமில்லை' என்றார். அப்போது 'பாவம் கொடுங்கோல் அரசனாகிய சயதுங்கனையே சாரும்' என்று அசரீரி எழுந்தது ஆகவே அப்பாவம் வளைத்தது. சைவ நெறியை மதியாத மன்னன் பேய் போலச் சுற்றி அலைந்தான். கங்கை முதலிய பல தீர்த்தங்களில் ஆடினான்; அளவற்ற தானங்கள் செய்தான்; ஒன்றாலும் பயன் இல்லை.

சனகன் ஒருநாள் அவனுடைய அரண்மனைக்குச் சென்றான் சயதுங்கன் வணங்கி இதற்கு ஒருபிராயச்சித்தம் கூறுக என வேண்டிக்கொண்டான். சனகன் , சிவநிந்தனை செய்பவனே! உனக்குச் சொன்னாலும் பாவம். ஆனாலும் சொல்கிறேன. நீ மாயூரத்திற்குச் சென்று இடபதீர்த்தத்தில்நீராடு. வள்ளல் பெருமானை வணங்கு. பிரமகத்தி முதலான பாவங்கள்கூட நீங்கும் என்று உபதேசித்தான. அவனும் அவ்வாறே சென்று நீராடி வள்ளலாரை வழிபட்டு. மாயூரநாதருக்கும் அஞ்சல்நாயகிக்கும் உற்சவங்கள் பல நடத்துவித்து, சைவசிகாமணியாக விளங்கினான்; மாயூரநாதர் கோயிலுக்குப்பல பணிகள் செய்தான்; சிலநாள்

அங்கேயே வசித்து காசிநகர் அடைந்து சைவ சமயத்தைப் பரப்பி நெடுங்காலம் வாழ்ந்து சிவலோகமடைந்தான்.

தீர்க்கசங்கை முத்தி அடைந்தது

தசரதராமன் ராவணாதியரைக்கொன்று அயோத்தியில் அரசாளுங்காலத்தில் இராமன் அசுவமேதயாகம் செய்தான். யாகத்தைக் காண எல்லா முனிவர்களும் வந்தனர் உரோமச முனிவரும் வந்தார். அவரைக் கண்டு எல்லோரும் வீழ்ந்து வணங்கினர். உரோமசர் அங்கு வந்திருந்த அட்ட வக்கிரரைக் கண்டு வணங்க, அவர் நீ நூறுகற்பம் கண்டவன்; நான் ஐபதுகற்பந்தான் கண்டவன்; ஆகையால் நீதான் பெரியவன, என்ருர். உரோமசர் வயது முதிர்ந்தால் போதுமா? நீ ஆண்டுதோறும் மாயூரம் சென்று இடபதீர்த்தத்தில் நீராடுகின்ருய்; ஆதலால் நீ என்னைவிட மிக மேலானவன் என்று சொன்ஞர்.

இன்னும் கேள் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மலைகளும் அறிந்த கவுண்டின்யகோத்திரத்திலே பிறந்த விஷ்ணுசாமி என்னும் வேதியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி இரேவை அவர்கட்கு அரி, கவி, சிவன் என்ற மூன்று மக்கள் பிறந்தனர் அவருள் அரி என்பவனுக்குத் தந்தையே மணம்புரிவித்தான். மற்ற இரு பிள்ளைகளும் உழுதொழில் செய்து செல்வராயினர்; அண்ணனாகிய அரியை விரட்டிவிட்டனர்.

அரி தன்மனைவியை மாமன் இல்லில் வைத்து மாயூரத்திற்கு வந்து துலாமாதத்தில் இடபதீர்தத மாடி மாயூரநாதரை வணங்குவேன் என்று வருகினறவன் சித்திரகூட பருவதத்தைச் சேர்ந்தான். அவனுக்கு

நல்லபசி. அங்குஒரு இடத்தில் புகை தெரிந்தது இங்கே மக்கள் யாரோ வாழ்கின்றார்கள் என்றெண்ணி அங்கே போய்ச்சேர்ந்தான். அது ஒரு அரக்கி வீடாக இருந்தது. அவள் ஒரு பிராமணப்பெண் வடிவமெடுத்து எதிரே வந்தாள். அந்தணன் அவளைப் பார்த்து அம்மா! எனக்குப் பசிக்கிறது; அன்னம் இடுக என்று கேட்டான். அவளும் அவ்வாறே உள்ளழைத்துச் சென்று சோறுஉண்பித்துத்தூங்கச் சொன்னாள். அந்தணன் பசியாலும் வழிநடந்த களைப்பாலும் அயர்ந்து உறங்கினான் அரக்கி தன் சொந்த வடிவமெடுத்து அவனைக்கொல்லத் துணிந்தாள் அரக்கி! அவனால் உன் பாவம் அகலும்; கொல்லாதே என்று ஒரு அசரீரி எழுந்தது. கேட்டமறையவன் விழித்துக் கொண்டான். பார்ப்பனி பரபரக்க தன் அரக்கி வடிவத்தோடு வணங்கினாள்.

முனிவர் பயந்து அரக்கி! நீ யார்? என்னிடம் என்ன காரியத்தை விரும்புகிறாய்? என்று கேட்டார். அரக்கி, என்பெயர் தீர்க்கசங்கை யமுனா தீரத்தில் வசித்த ராமன் என்னும் அந்தணன் புதல்வி எனனை என் தந்தை கிருஷ்ணன் என்பவருக்கு மணம் செய்து கொடுத்தார். என் புக்ககத்தில் கணவரையும் மாமன் மாமியரையும். மதியாமல் வாழ்ந்து வந்தேன் அதைக் கண்ட ஊரவர்கள் என்னையும் என் கணவரையும் வேறாக வைத்தார்கள். அங்கும் என் கணவருக்குப் பணியாது வாழ்ந்து வந்தேன். மனம் போனபடியே வாழ்ந்து பெரும் பொருள் ஈட்டினேன் நோய்வாய்ப்பட்டேன். என்பொருளையும் கள்வர்கள் கவர்ந்து சென்றனர். இறந்து பன்னெடுங்காலம் நரகில் வருந்தினேன். பின்னர் அரக்கியாகப் பிறந்து அலைகின்றேன். இப்பிறவி நீங்கும் உபாயம் எனக்கு அருளுக என்று வேண்டிக்கொண்டாள். அதுகேட்ட

முனிவர் மனமிரங்கி அவளையும் அழைத்துக் கொண்டு மாயூரம் வந்து சேர்ந்தார். இடபதீர்த்தத்தில் நீராடி வள்ளலை வணங்கச்செய்தார். அரக்கி அவ்வாறே செய்து தெய்வயாக்கைபெற்று, தேவமாதராய்ச் சொர்க்கம் அடைந்தாள். முனிவர் அஞ்சல்நாயகி சமேத மாயூரநாதரை வணங்கித் தன்னிருப்பிடம் சேர்ந்து வாழந்திருந்தார்.

பார்க்கவி பூசித்தது

திருமால், திருமகள் புவிமகள் நீளை என்ற மூன்று மனைவியர்களுடன் இல்லறம் நடத்திவரும் நாளில் அவருக்கு நீளைபால் காதல் மிக்கது. அவளுடனே இல்லறம் நடத்திவந்தார். ஒருதினம் திருமகளைத் தழுவச்செல்ல அவள் தீராத ஊடல் உற்றுள. அதனால் திருமால் அவளை மானுடமாதாகச் சபித்தார். திருமகள் பிருகுமகரிஷியின் மகளாகத் தோன்றினாள். மங்கைப் பருவம் எய்தியதும் திருமால் வந்து மணந்து கொள்வதற்கேற்ற நோன்பும் இயற்ற வேண்டும்; அதற்கேற்ற இடமும் முறையும் அருளுவாயாக என்று கேட்டுக்கொண்டாள். பிருகுமகரிஷி மாயூரத்தின் பெருமையை எடுத்துரைக்க அங்கு வந்து அஞ்சல் நாயகியையும் மாயூர நாதரையும் வழி பட்டு வந்தாள். இறையருளால் திருமால் பிருகுவின் ஆசிரமத்திற்கு வந்து பிருகுவைக் கேட்டு, பார்க்கவியை மணந்து கொண்டு வைகுண்டம் சேர்ந்து வாழ்ந்து வந்தார்.

கலைமகள் பூசித்தது

சத்தியலோகத்தில் பிரமன் முன்பு ஒரு நாள் வாலகில்லியர்கள் வந்தார்கள். அவர்களின உருவத்தைக் கண்டு கலைமகள் எள்ளிநகையாடினாள். அதைக் கண்ட அவர்கள் நீ மானுடமாது ஆகுக என்று சபித்

தனர். கலைமகள் துணுக்குற்று இச்சாபம் நீங்கும் உபாயமும் உணர்த்துக என்று வேண்டிக்கொண்டாள். வாலகில்லியர்கள், 'முன்னொருகாலத்தில் அத்திரி முதலிய முனிவர்கள் ஒருவனத்தில் தங்கியிருக்கும் பொழுது அவர்களைக் கொள்ளிவாய்ப்பேய் ஒன்று பற்ற வந்தது. அவர்கள் அதைப்பார்த்து நீ யாரென்று வினவினர்கள். அதற்கு அப்பேய் 'நான் ஒரு பிராமணப் பெண். நான் கட்டிய கணவனை மதியாது கீழான நிலையில் வாழ்ந்து வந்தேன் அப் பாவத்தால் இப்பேயுருவம் தாங்கினேன், இவ்வுரு நீங்கும்படி அருள்செய்ய வேண்டும்' என்று வேண்டிக்கொண்டது. முனிவர்கள் மாயூரம் சென்று இடபதீர்த்தத்தில் மூழ்கினால் இறைவன் அருளால் இவ்வுருநீங்கிப் பார்ப்பனியாவாய் என்றுகூறினர்கள். அவளும் அவ்வாறே செய்து மாயூரநாதரை வழிபட்டு பிராமணப் பெண்ணாகிக் கணவனோடு வாழ்ந்தாள்.

இடப வரலாறு

சூதமுனிவரைப் பார்த்து அவருடைய சீடர்கள் காவிரித்துறைக்கு இடபதீர்த்தம் என்று பெயர் வந்தது எப்படி ? என்று கேட்டனர். அவர் இடப தீர்த்த வரலாற்றைச் சொல்லுகின்றார்.

பார்வதிதேவி மயிலுருக்கொண்டு மாயூரத்திற்கு வந்திருந்த பொழுது சிவபெருமான். திருமால் பிரமன் முதலிய தேவர்கள் தன்னைச்சூழ இடபத்தின் மேலேறி அதனை விரைந்து செலுத்தினர் தேவர் முதலானோர் விடையின வேகத்துக்குத் தங்கள் ஊர்திகள் மிகவும் காலந் தாழ்த்திச் செல்லுகின்றனவே என்று வருந்திப் பின்வந்தனர். கருடன் அன்னம் முதலிய ஊர்திகளெல்லாம. விடையின் பின்னர் வருவதற்கு வலியில்லாமல் பல யோசனைதூரம்

வலியிழந்து விட்டன வேகமாகவந்த இடபம் காவிரித் துறையை ஒரு நொடிப் பொழுதிலே அடைந்து தனது வேகத்தை எண்ணிச் செருக்கி நின்றது. இடபத்தின் செருக்கை அறிந்த சிவபெருமான் தமது திருக்கால் விரல் ஒன்றால் சிறிது ஊர்தியை அழுத்தினார். அவ்வளவுதான இடபம் பாதாள உலகம் வரை சென்று அழுந்தியது : தனது செருக்கை எண்ணிமிக வருந்தியது. ஆணவமலமும் அடங்கியிருக்கிற ஆண்டவன் முன்னிலையில் அடியேன் செருக்குக் கொண்டேன் ; அறிவில்லாமையினால் இத்தகாத செயலைச் செய்தேன் ; குற்றம் பொறுத்தருளி அடியேனைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று பரமனைப் பலவாறு வேண்டி நின்றது.

கயிலைமலையைப் பெயர்க்க எண்ணிய இராவணன் அடைந்த துன்பம் என் எண்ணத்தில் இருக்க நானும் இப்படிச் செய்தது பெருந்தவறல்லவா? இராவணன் தன் ஆணவம் அடங்கி வருந்திய பொழுது அருள்செய்த கருணைமூர்த்தி அல்லவா நீ. அடியார்செய்த தீமையை மறப்பவனே! ஓலம் ஓலம் என்று பலவாறு புலம்பி மனம் வருந்தி உருகி ஆண்டவனுடைய கருணையைப்பெற வேண்டி நின்றது தான் செய்த குற்றத்தை எண்ணி வருந்திய இடபத்தைப் பெருமான் பிலத்தினின்றும் மேலெழும்படியாக அருள்செய்தார். இடபமானது மேலெழுந்து காவிரியாற்றின நடுவிலே வந்து நின்றது. பெருமான் இடபத்தைப் பார்த்து, காவிரித் துறையின் நடுவில் மேற்குநோக்கியிருந்து முறைப்படி இந்த இடததில் காவிரி நீராடுவார்க்கு வேண்டும் வரங்கொடுத்து வாழ்வாயாக! உன் மற்றொருகூறு நமமைத் தாங்கும் பேறுபெறுக; இங்கு நீராடுவோர் பிறவற்றில் நீராடுகின்ற பயனைப்பெறுவர் என்று

வரம்கொடுத்து இன்னும் வேண்டுமானால் கேள் என்று அருளினர்.

இடபம் பெருமானை வணங்கி அடியேன் ஆணவத்தினால் பிலம்சென்று மீண்டிருக்கிறேன்; அச்செருக்கு ஆழியும்படி அடியேனுக்கு ஞானோபதேசம் செய்தருள வேண்டும் என்று வேண்டிற்று.

சிவபெருமான் 'ஐப்பசிமாதம் அமாவாசையன்று கங்கை முதலிய தீர்த்தங்களெல்லாம காவிரியிலேயே வந்து நீராடும்; அந்த நாளில் உனது வேண்டுகோளை நிறைவேற்ற இத்துறையின் வடதிசையில் தோன்றுவோம். அந்த இடம் உத்தர மாயூரம் என்ற பெயர் பெறும்; அங்கு நாம் உனக்கு ஞானாசிரியனாய்த் தெற்குநோக்கியிருந்து உபதேசம் செய்வோம்' என்றருளிச்செய்தனர். இடபம் அந்த நாள் என்று வரும் என்று எண்ணி எண்ணி ஏங்கி நின்றது. தருமவிடையாகிய இடபம் காவிரியில் நிற்றலால் இடபதீர்த்தம் என்று இத்துறைக்குப் பெயர் வழங்கியது. இங்கு நீராடுவோர் பெருஞ்செல்வம் பெற்று வாழ்வர்.

இடபத்தின் நான்குகால்களும் நான்குவேதங்கள். உரோமங்கள் சாத்திரம். கொம்புகள் சிவ சொரூபம் சுருதியும் மிருதியும் கண்கள். பிரணவம் சுவாசம் திமில் உமை. ஆகமங்கள் நெற்றி. இவ்வாறு எல்லா விதத் தெய்வங்களும் போற்றும்படியாகத் திருவுருவம் பெற்று இடபம் இங்கே விளங்குகிறது. இங்கு இடப தேவரை வணங்கி இடபதீர்த்தமான காவிரித் துறையில் நீராடுவார் எல்லா நலங்களையும் பெறுவர்.

உத்தரமாயூர வரலாறு

இடபதேவருக்குப் பெருமான் வரம் அளித்தபடி, காவிரிவடகரையில் இலிங்க வடிவாகத் தோன்றினர்.

திருமால் பிரமன் ஆகிய இருவரும் தமக்குள் நானே தலைவன் என்று போட்டியிட்டுப்போர் விளைவித்துக் கொண்ட பொழுது இறைவன் வயிரவரை அனுப்பிப் பிரமனைத் தலை குனியச்செய்தும், திருமாலை இரத்தம் பீறிடச்செய்தும தண்டனை அளித்துத் தானே தலைவன் எனபதைநிரூபித்தார். இருவரும், அறியாமையால் தாங்கள தலைவன் என்று சொல்லியது தவறு என்பதை உணர்ந்து கௌரீமாயூரத்தை அடைந்து வணங்கினர். பெருமான் அவர்களை நோக்கி நீங்கள் இடபதீர்த்தத்திலே நீ ராடி உத்தரமாயூரத்தை அடைந்து நம்மை வணங்கி அருள்பெறுக என்று ஆணையிட்டார்.

இருவரும் இறைவன் ஆணையின்படியே வந்து நீராடி அபிடேக ஆராதனைகள் செய்து வழிபட்டனர். பெருமான் அவர்களது அனபிற்கு இரங்கி, படைத்தல் காத்தல் தொழில்களை நீங்கள் மீண்டும் மேற் கொள்ளுங்கள் என்று அருள்செய்தார்.

இடபதேவருக்கு உபதேசித்த வரலாறு

இடபதேவருக்கு அருள் செய்தபடி அதற்கு உபதேசம் செய்ய மாயூரநாதர் திருவுள்ளம் கொண் டார். கங்கை முதலிய புண்ணியதீர்த்தங்கள் யாவும் காவிரியில் வந்து நீராடும் துலாமாச அமாவாசையில் இடபத்தையும் மூழ்கச்செய்து, காவிரியாற்றின் வட கரையிலுள்ள வள்ளலார்கோயிலின் தெற்குப்பக்கத் திலே குருமூர்த்தியாக எழுந்தருளினூர். இடபத்தைக் கருணையோடு பார்த்துப் பின்வருமாறு உபதேசிக் கலானூர்.

அகச்சமயம் புறச்சமயம் இவற்றுள் உழன்று. வருணச்சிரம தருமங்களில் தவருது நின்று வேள்விகள்

பல செய்து, வேதாந்த ஞானம் முற்றிய ஞானிகளே சிவதீட்சைகளைப் பெறுவதற்கு உரியவர்கள். தீட்சை நயன தீட்சை ஸ்பரிச தீட்சை வாசகதீட்சை, மானச தீட்சை, சாத்திரதீட்சை, யோகதீட்சை, அவுத்திரி தீட்சை என ஏழுவகைப்படும். அவற்றுள் அவுத்திரி, கிரியாவதி ஞானவதி என இரண்டு வகைப்படுவதாகும். அவை ஒவ்வொன்றும் சமயம், விசேடம், நிர்வாணம் என மூவகைப்படும்.

தீட்சைக்கு உரியவர்கள் நம்மை அடைவதற்கு இயற்றும் தவம் நான்குவகை. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவைகளால் முறையே சாலோகம். சாமீபம், சாரூபம். சாயுச்சியம் என்ற இப்பதவிகளை அடையலாகும். இவற்றுள் சரியையாவது ஆலயத்தை அலகிடல், மெழுகல், மலர் பறித்தல், மாலை கட்டுதல். விளக்கேற்றுதல், நமது அடியவர்களை நாம் எனவே கருதிப் பணி செய்தல் முதலிய தாசமார்க்கமாம் கிரியையாவது சரியையில் நின்று முதிர்ந்தபின் வேள்விக்கு உரிய விசேட தீட்சை பெற்றுப் பூசைக்கு வேண்டிய உபகரணங்களையும் சேகரித்துக்கொண்டு சத்தியாதிச் சத்திபரியந்தம் பதுமாசனம் அமைத்து அதில் சிவபெருமானைப் பாவித்து ஆவாகனம் செய்து பூசித்து, அக்கினிகாரியமும் செய்யும் சற்புத்திர மார்க்கமாகும். யோகமாவது கிரியை முற்றிய பின்பு இயம நியமங்களை இயற்றிப் பிராணயாமம் செய்து சுழுமுனை வழியாகப் பிராணன் இயங்கப் பழகி மூலாதார முதல் ஆறு ஆதாரங்களிலும் அக்ஷரம். அதிதெய்வம், சக்கரம் இவற்றைத் தியானித்துச் சகஸ்ராரமாகிய மதிமண்டலத்து அமுதத்தை அருந்தி அங்கிருந்து கீழ் இறங்காது அங்கேயே அழுந்திச் சமாதி கூடி இருக்கின்ற சக மார்க்கமாம்.

இந்த யோக மார்க்கம் முதிர்ந்த பிறகு இரு வினையொப்பும் சத்திநிபாதமும் வந்தபின் யாமே ஆசாரிய மூர்த்தமாகத் தோன்றி நிர்வாண தீட்சை பண்ணி அத்துவசுத்தி செய்து, ஸ்ரீ பஞ்சாக்ரத்தை உபதேசித்து, பாசக்ஷயம் பண்ணுவித்துப் பேரின்ப நிலையில் நிறுத்துவோம். அந்த உண்மைஞானத்தை உணர்த்தலே சன்மார்க்கமாம்.

உண்மை ஞானமாவது பதி பசு பாசம் உணர்த லாம், அவற்றுள் பதியாவது பிறத்தல், இறத்தல், பெருகல் சுருங்கல், விருப்பு வெறுப்பு, பெறுதல் இழத்தல், மறத்தல் நினைத்தல், மயங்கல் தெளிதல், வெகுளல் உவத்தல், வருந்துதல் களித்தல், நிற்றல் நடத்தல், வெட்பமாதல் தட்பமாதல், பிரிதல் கூடல் இவை ஒன்றும எய்தாது, தூய்மையுடன், நினைத் தற்கு அரிய பரமானந்தமாய் மலமாயைகளிலிருந்து இயல்பாகவே நீங்கி, யாவரும் புனைவதற்குரிய ஞானமே வடிவாய், மலருள் மணம்போலக் கலந்தும் வேருயும் வேத முடிவும் காண முடியாத ஒன்ருய், தன்னை அடைந்த அடியார்களுக்கு அபேதமாய், யாவற்றையும் ஒருசேர உணருகின்ற சிறப்பினதாய், தானேதனாய் உரு அரு அருவுருவாகிய இக்குறிகளைக் கடந்து பந்தோமோக்ஷம் இல்லாததாய் எல்லா உயிர்களுக்கும் அருள் விளங்கி, ஒன்ருயும் வேருயும் இருந்து தொழிற்படுத்தி அவைகளுக்கு ஞானத்தை அருளி வீடுபேறு அருளுந் தன்மையதாய், ஒரு முதலாய் ஞானமாய் விளங்குவது என உணர்வாயாக.

சத்தாகிய இறைவனையும் அசத்தாகிய பிரபஞ்சத் தையும் பகுத்து உணரத்தக்க சத்தாய், வெண்பளிங்கு போலச் சார்ந்ததன் வண்ணமாய், நித்தியமாய், சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்னும் மூவகை

யாய், பலவாய் எல்லாவற்றையும் மறைத்திருக்கிற இருளும் ஒளியும் இல்லாத கண்ணின் இயல்பு உடையதாய், நம்மால் தூய்மையுற்று இன்புறுவன சிற்றுணர்வும் சிறுதொழிலும் உடைய பசுக்களாம்.

பல்வேறு ஆற்றல்களுடையதாய், ஒன்ருய், நித்தியமாய், தொன்றுதொட்டு வருவதாய், நம் அருளால் வலிகுன்றுவது ஆணவமலமாம். இதனது வன்மை வாட்ட தனு கரண புவன போகங்களை இருவினைக்கு ஏதுவாக நாம்உதவ முதற்காரணமாவது சுத்தம் அசுத்தமாகிய மாயைகளாம். இரு வினைக்கு ஏதுவாகச் சொல்லப்படுவது காமியமாம். இவற்றை நிகழ்த்துவது திரோதானமாம் இவ்வைந்து மலங்களும் ஆன்மாக்களுக்கன்றி நமக்கு இல்லை இவைகளை ஆன்மாவிற்குச் சேர்த்தியது ஆணவமலத்தின் வன்மையை வாட்டுவதற்கு என்று அறிவாயாக. இம் மலங்களைக் கொடுத்து ஆணவமலத்தை அகற்றுதல் அழுக்கேறிய ஆடையை உவர் மண்ணும் சாணியும் இட்டுப் பின்னும் அழுக்காக்கி, தூய்மை படுத்துவது போல்வதாம் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் முதலிய இத்தொழில்களைப் பிரமன் முதலியோரைக் கொண்டு நாம் செய்வித்தாலும் நமக்கு அதனுல் விகாரமில்லை என்று அறிவாயாக.

மாயையானது நமக்குப் பரிக்கிரகசத்தியாயினும் நம்மை மயக்காது. விஷம் பாம்புக்கு ஒன்றும் செய்யாததுபோலவும், வெப்பம்தீயைஒன்றும்செய்யாதது போலவும், இந்திரஞாலம் செய்வோர் தாம் மயங்காது பிறரை மயக்குவதுபோலவும் உயிர்களை மயக்குகின்ற மாயை நம்மை மயக்காது. உயிரும்திரோதானமலமும் பிற்பட, நாமும்திருவருள் சத்தியும் மேல்ஓங்கி விளங்க ஆணவமலமானது தேய. சத்தி பதிந்து, மலபரிபாகம் பொருந்தச்செய்வோம். அப்


வடக்கு
திருக்குறுக்கை மன்மதஸம்ஹாரம்
கைகாட்டும் வள்ளல் வள்ளலார் கோயில்
விசுவநாதர்
ரிஷப தீர்த்தம்
திருவிளநகர் துறைகாட்டும் வள்ளல்
திருக்கோயில் ஸந்நதி
மூவலூர் வழிகாட்டும் வள்ளல்
ஐயாறப்பர் கோயில்
மேற்கு
கிழக்கு
திருப்பறியல் யாகஸம்ஹாரம்
வழுவூர் கஜஸம்ஹாரம்
வாக்குக்காட்டும் வள்ளல் பெருஞ்சேரி
திருக்கடவூர் காலஸம்ஹாரம்
தெற்கு

போது உயிர்கட்கு இருவினையொப்பு வாய்க்கும் திரோதானசக்தி அருட்சக்தி ஆகும். அது அறியாமையை நீக்கி, இச்சாஞானக்கிரியைகளாய். ஆன்மாவின் இச்சையாதிகளை நன்கு விளக்கம் செய்து சிவத்துவ வியாப்தியை அளிக்கும். அதனால் நம்மையும் தன்னையும் அறிந்த உயிர், தெளிந்து நம்முள் அடங்கி ஆனந்தானுபவத்தில அழுந்திநிற்கும். ஆதலால் அது நாமே பிரமம், அருளினால் நாம்பிரமமானோம். என்ற நிலைகளை விட்டுச் சிவமாகிய எம்மை அடைதலே முத்தியென உணர்ந்து தெளியும். ஆகாமிய சஞ்சிதமாகிய வினைகள் அருட்சார்பால் அழியப் பிராரத்தமட்டும் நுகர்ந்து கழிக்கப்படுவதாக இருக்க அவ்வினை வாதனையாய் வந்து பற்ற, திருவைந்தெழுத்தால் அவ்வாசனாமலத்தையும் வீட்டி. உணர்வானும், பொருளும், உணர்வுமாகிய மூன்றும் அற்றுச் சிவத்தை வழிபட்டு வாழ்வதே சீவன்முத்தியாகும். மேலும் பரமுத்தி இங்கே பெறுவது எளிதாம் என்று உபதேசித்தார். இடபம் அதனை அறிந்து, இறைவன் ஆசான்மூர்த்தியாக எழுந்தருளி உரைத்த எல்லாவற்றையும் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடிக் காவிரியாற்றின் நடுவில் இன்பமயமாக வீற்றிருந்தது.

சப்தபுரமான வரலாறு

பிராமி முதலான சப்தமாதர்களும் கயிலைக்குச் சென்று இறைவனை வணங்கி, யாம் நின்னை வழிபட எண்ணுகின்றோம் ; அதற்கு உரிய தவம்எது ? என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் சப்தமாதர் களே நீங்கள் இடபதீர்த்தத்தில் மூழ்கி அதனைச் சுற்றியுள்ள ஏழு தலங்களிலும் எம்மை வழிபடுக என்று அனுப்பிவைத்தார். அவர்களும் அவ்வாறே வந்து காவிரியில் நீராடிப் பூசித்தனர். பிராமி தான் தோன்றிய நாதனை

வழிபட்டு எல்லா நலங்களையும் எய்தினள். மாகேசுவரி கர்ணபுரீசுவரரைவழிபட்டுப் பெருஞ் சிறப்பு எய்தினள். கௌமாரி கஞ்சாறூர் இறைவனை வழிபட்டுப் பல வரங்களை அடைந்தது இன்புற்றாள் வைஷ்ணவி பசுபதீச்சரத்தில் உள்ள புண்ணியநாதரைப் போற்றி உய்ந்தாள். வாராகி வழுவூரில் உள்ள இறைவனைப் பூசித்துச் சிறப் பெய்தினள். இந்திராணி தருமபுரத்திலுள்ள தருமபுரீசுவரரை வழிபட்டுப் பல வரங்களை பெற்றாள் சாமுண்டி உத்தரமாயூரநாதரைப் வழிபட்டு உய்ந்தாள் இவ்விதம் சப்தமாதர்களும் இறைவனைத் தனித் தனியே வழிபட்டு உய்ந்தார்கள்.

சுகந்தவன வரலாறு

முன்னொருகாலத்திலே விதலசுரன் என்பவன் வாழ்ந்துவந்தான். அவன் தனதுகுருவாகிய சுக்கிராசாரியாரை அடைந்து அடியேனுக்குத் தாங்கள் இடும் பணியாது? என வினவ, சுக்கிராசாரியார் 'நீ பிரமனை நோக்கித் தவம்செய்து தேவர்களை வெல்லக்கூடிய வரங்களைப் பெறுவாயாக; அதன்பிறகு எல்லா உலகங்களையும் வென்று வாகைசூடி வாழ்வாயாக; தேவர்கள் உம்முடைய வன்மையை வாட்டுவதற்காக மாயூரத்திற்கு வருவார்கள்; இடபதீர்த்தம் ஆடுவார்கள்; மாயூரநாதரை வழிபடுவார்கள்; அப்பொழுது நீ மடிவாய்; ஆதலால் இதனை 'நிகழாமல் பார்த்துக் கொள் ' என்று விடை கொடுத்து அனுப்பினார். அரசனும் அவ்விதம் செய்தான். பிரமன் தோன்றினன். அசுரன் பிரமனைப் பார்த்து இந்த மண்ணுலகையும் விண்ணுலகையும் பெற்று அழியாப் பெருஞ்செல்வத்துடன் வாழ வரம் தரும் வண்ணம் வேண்டினன். பிரமனும் அவ்வாறே அருளினேம் என்றுகூறி மறைந்தான். விதலன் தனது ஆசிரியனை

அடைந்து, பெற்ற வரங்களை அறிவித்தான்; படை திரட்டினான். மண்ணுட்டையும் விண்ணுட்டையும் வென்றான். அமரர்கள், மாயூரத்தில வந்து வழிபட்டு இழந்த விண்ணுட்டை வெல்லக் கருதினர்; வழி பட்டனர்; இறைவன் தேவர்களுடைய கனிந்த மனத்திற்கு இரங்கித் திருமாலைப் பார்த்து, நீ! விதலனை வென்று வருக! என அனுப்பி வைத்தார். திருமாலும் அவ்வாறே சென்று வென்றுவந்தார். மகிழ்ச்சியுற்ற மாயூரநாதர் எமக்கு வடமேற்றிசையில் சுகந்தவனம் எனற ஒரு இடமுண்டு; அங்கே நீ இருக்கஎன்றுபணித்தார் திருமால்திருவருளாணையின் வணணம் விதலாசுரனை அழித்துச் சுகந்தவனத்தை அடைந்து திருமகள் விடுவச்சேனன் இவர்களோடு உலகு மகிழக் கவலையற்றுக் கண்ணயர்ந்தார்.

மாயூரவள்ளல் நாற்றிசை வள்ளலாகியது

முன்னொருகாலத்து இறைவன் திரிபுரம் எரியத் தீக்கணை ஒன்று செலுத்தினர். புரங்கள் மூன்றும் வெந்து சாம்பலாயின. இந்திரன் பிரமன் திருமால் முதலிய தேவர்கள் அக்கணையைத் தேடிக்கொண்டு திருவதிகையிலிருந்து புறப்படுத் தென்திசை நோக்கி வந்தார்கள்; காவிரியின் வடகரையை அடைந்தார்கள் காவிரியில் நீர் பெருக்காக இருந்தது. வழி தெரியல்லை. மாயூரேச ஓலம்! வள்ளலே ஓலம்! என்று வருந்திஞாகள். மாயூரநாதர் இரக்கங் கொண்டு ஒரு வேடனுய் வந்தார். மூவரையும் பார்த்து நீங்கள் இங்கு வந்த காரணம் யாது என வினவினர். சிவ பெருமான் திரிபுரம் எய்த அம்பு இங்கு வீழ்ந்தது; அதனைத் தேடிக்கொண்டு வந்தோம்; அதனைக் காட்ட வேண்டுமென்று வேணடிக் கொண்டார்கள். வேடன் என் பின்னே வாருங்கள் என்று வழி காட்டிச்

சென்றான். தேவர்கள் வேடனைக்காணாது திகைத்தார்கள்; அங்கு இலிங்கமொன்றைக் கண்டார்கள்; அம்மையும் கண்டார்கள; வியப்பெய்தினார்கள்; வழிகாட்டும் வள்ளலே இப்படி அருளியது என்று போற்றி அம்மை எடுத்துக் கொண்டு தத்தம் இருப்பிடத்தை அடைந்தார்கள். திருமால் சப்தமாதர் சூரியன் வைரவர் இவர்கள் பூசித்து வரம்பல பெற்றது இத்தலமே. இவரே மேற்றிசைவள்ளல். இடபத்திற்கு அருள்செய்த வடதிசை வள்ளல் மோனமுத்திரைக்கை காட்டி முழுதுமுடன் ஞானத்தை அடியவர்களுக்கு அருளுகின்ற தன்மையால் கைகாட்டும் வள்ளல் என வழங்கப்பெறுவார்.

ஒருக்கால் கவுணியர்குல திலகமாகிய திருஞான சம்பந்தபெருமான் சிவனடியார் திருக்கூட்டத்தோடு மாயூரத்திற்கு எழுந்தருளினர். காவிரி வெள்ளம் கரைபுரண்டோடியது. இறங்குதுறையோ தெரியவில்லை. இறைவனைப் பிரார்த்தித்தனர். இறைவன் வேடனாக வந்து 'நான் துறை காட்டுகிறேன்' என்று முன்னே சென்றார். ஞானசம்பந்தர் பின்னே சென்றார். காவிரிநீர் ஞானசம்பந்தக் குழந்தையின் கணைக் காலளவாகிவழிவிட்டது. தென்கரையை அடைந்தார். அங்கேவிழல் மண்டிக்கிடந்த ஓரிடத்திலே வழிகாட்டி வந்த வேடன் மறைந்தான். திருஞானசம்பந்தர் வேடனைக் காணாது திகைத்தபொழுது அங்கே ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டார். துறைகாட்டும் வள்ளலோ எனத் தொழுதார். பின்னர் மாயூரம் வந்து வணங்கிப் பதிகம் பாடிப் பிறதலங்களையும் வழிபடச்சென்றார்.

வியாழன், மாயூரம்வந்து ஒருவள்ளலைப் பலநாள் வழிபட்டுத் தேவர்களுக்கெல்லாம் குருவாக வேண்டும் என்று வரம்கேட்டான். இறைவன் நமது நகர்க்குத்

தென்புறம் அடைந்து சிவலிங்கத்தைப் பூசித்து நால் வகை வாக்குகளையும் அடைக என்றார். வியாழனும் அவ்வாறே சென்று வழிபட்டு அவ்வாக்குகளைப் பெற்றான். இவ்வள்ளல் வாக்கு அருளியமையால் வாக்கு நல்கும் வள்ளல் என்றும், அருள்வள்ளல் என்றும் வழங்கப்படுவார். இவ்வண்ணம் மாயூர வள்ளலே நாற்றிசைக்கும் நான்கு வள்ளலாகிவேறு வேறு நாமம் பூண்டு விளங்கினார்.

விசுவநாதர்

துலாமாசத்து அமாவாசையில் காசி விசுவநாதப் பெருமான் தேவர்கள் புடைசூழ இடபதீர்த்தத் தென் துறைக்குத் தென்பால் உலகம்வாழ ஒரு இலிங்கமாய் எழுந்தருளினார். அதனை அறிந்த அன்னபூரணி யாகிய விசாலாட்சியும் துண்டி விநாயகரும் வயிர வரும் எழுந்தருளி வந்து இனிது வீற்றிருந்தனர். அதனை அறிந்து கயாதீர்த்தமும், விஷ்ணுபாதமும், ஆலமரமும் அங்கே வந்தன. அங்கு இருந்த மக்கள் காசியைக் காட்டிலும் இத்தலம் மேன்மை யானது என்று வியந்து போற்றினர். கங்கையைக் காட்டிலும் காவிரி பெரிது என்று கொண்டாடினர். பிதுர்தேவ தைகளுக்கு இந்த இடத்திலே சிரார்த்தங்கள் செய்து மகிழ்ந்தனர்.

அஷ்டலிங்கம்

இந்திரன் முதலான தேவர்கள் இங்கே வந்து வழிபட்டகாலத்துத் தத்தம்பெயரால் ஒரு சிவலிங் கத்தை ஸ்தாபித்து வழிபட்டார்கள். இந்திரன் கீழ்த் திசையில் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்துத் தீர்த்தமும் அமைத்து அவற்றிற்கு இந்திரலிங்கம் இந்திரதீர்த்தம்

என்ற பெயர்கள் வழங்கும்படி வழிபட்டான். அக்கினி தலத்தில் அக்கினிதிசையில் ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து அக்கினி தீர்த்தத்தையும் உண்டாக்கி வழிபட்டான். அவ்வாறே எமன் எமலிங்கம் எமதீர்த்தத்தையும், நிருதி லிங்கம் நிருதி தீர்த்தத்தையும் வருணன் வருண லிங்கம் வருணதீர்த்தத்தையும், வாயு வாயுலிங்கம் வாயுதீர்த்தத்தையும், குபேரன் குபேரலிங்கம் குபேரதீர்த்தத்தையும், ஈசானன் ஈசான லிங்கம் ஈசானதீர்த்தத்தையும் தத்தம் திசையில் அமைத்து வழிபட்டனர்.

நாதசன்மன் அனவித்தை முத்தியடைந்தது

நாதன்சன்மன் என்னும் அந்தணன் வேள்விகள் பல செய்து எப்பொழுதும் சிவசிந்தனையோடு திருவைந்தெழுத்து ஓதிக் காலம் கழிந்துவந்தான். அவன் மனைவி அனவித்தை என்பவள் கற்பிலும் பொற்பிலும் சிறந்தவள். அவளும் நாதசன்மாவோடு தவவொழுக்கத்திற்கு ஏற்ற பணிகள் புரிந்து வந்தாள் இதனால் நாதசன்மா கயிலையில் சாலோகபதவியடைந்தான; மேலும் சாயுச்சிய பதவி அடைவதற்கு விரும்பினன். இறைவனிடம பிரார்த்தித்துக்கொண்டான். திருக்கயிலை நீங்கி மனைவியோடு கூடமண்ணுலகு அடைந்தான். பல தலங்களையும் வழிபட்டுக்கொண்டு மாயூரததை அடைந்தான இங்கே தமக்கு சித்தசாந்தியும், சிவஞானமும் உண்டாதலை அறிந்து சிவலிங்கப்ரதிஷ்டை செய்து பூசிததுவந்தான். மாயூரநாதர் தோன்றி அவனுக்கு சாயுச்சியபதவி அளித்து மறைந்தார் நாதசனமாவும் அனவிதையும் அவரவாகள் பூசித்த சிவலிங்கதததுள் மறைந்தனர். சிவானந்தபோகத்து அழுந்தனர்.

ஐயாறப்பர் சிறப்பு

ஐயாறப்பரும் அறம்வளர்த்த நாயகியும் மாயூரத்திலுள்ள விருப்பத்தால் இங்கு எழுந்தருளியுள்ளார்கள். விநாயகப்பெருமான், முருகன், வடுகன், நந்தி முதலான சிவகணங்களும் சேர எழுந்தருளினர். வடகயிலாயம் தென்கயிலாயம் என்னும் தலங்களும் தீர்த்தங்களும் ஏனைய சிறப்புகள் யாவும் ஒருங்கு அமைந்தன நாதசன் மாவுக்காக ஐயாறப்பர் அடியார்கட்கு எளியனாய் எழுந்தருளினார் என்ற வார்த்தை உலகமெலாம் பரவிற்று ஐயாறப்பர் திருவையாற்றில் ஆசை விடாமையால் மேற்குமுகம் நோக்கி அமர்ந்திருந்தார். அடியார்கள் ஐயாறப்பருக்கு ஆலயம் அமைத்து நித்திய நைமித்திக பூசைகளையும், திருக்கல்யாண விழா சப்தஸ்தானவிழா முதலியவற்றையும் ஒழுங்காக நடத்தினர். இத்தலத்து யார் எதைவேண்டி வழிபட்டாலும், அதனை அடைவது உறுதி. ஐயாறப்பர் திருமுன்புள்ள தீர்த்தத்தில் நீராடி இயன்ற அளவு தானம் செய்யின் அதனால் வரும் பயன் அளவிடற்கரிது.

இடபதீர்த்த மகத்துவம்

முன்னொரு கற்பத்தில் மூனறரைக்கோடி தீர்த்தங்களும் கயிலைக்குச்சென்று தவமசெய்தன. பெருமான எழுந்தருளி நீங்கள் விரும்புவதுயாதெனவினவினார். தீர்த்தங்கள எங்களிடம் எல்லாரும் வந்து நீராடுவதால் பாவஙகள் எல்லாம் சுமந்து ஒளி குன்றிக் கறுத்து விட்டோம்; எங்கள் பாவத்தைக் கழுவும் இடம் ஒன்று அருளுதல்வேண்டும் என்று வேண்டிக்கொண்டன. பெருமான் மாயூரத்தில் இடப தீர்தத்திலே மூழ்கிப் போக்கிக்கொள்க எனறு அருளி மறைந்தார். தீர்த்தங்கள அவ்வாறே வந்து நீராடி மாயூரேசனை வழிபட்டுப் புனிதமாயின.

தாயைப்புணர்ந்த மறையவன் ஒருவன் இடப தீர்த்தத்தில் மூழ்கி ஆடாகப் பிறந்திருந்தான். இடப தீர்த்தக்கரையில் மகேசன் என்னும் பிராமணன்யாகம் செய்தபோது அதற்கு உபயோகப்பட்டான். அதனுல் சொர்க்கலோகம் புகுந்தான். சுதன்மை என்ற தாசி ஒருத்தி தீராப்பிணியால் வருந்தி, தண்டகாரணியத்தில் உள்ள சிவதாசன் சொற்படி இடபதீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கினுள். இடப தீர்த்தத்தில் மூழ்கிப் பூதானம் செய்யின் கயிலை அடையலாம். அரிசி பயறு உளுந்து மற்றுமுள்ள நவதானியங்கள் தானம் செய்யின் உத்தியோகத்தில் வீற்றிருக்கலாம். பூசனிக்காய் தானம் செய்யின் சூரியமண்டலத்தில் வாழலாம கன்னிகா தானம் செய்யின் இந்திரலோகத்தை எய்தலாம். வஸ்திர தானம் செய்யின் சந்திர மண்டலத்தைச் சாரலாம். சொர்ணதானம்செய்யின் வையமெல்லாம் ஒரு குடைக்கீழ் அரசாளலாம். தேங்காய் வெல்லம் இவற்றை ஈவோரும் அன்னதானம் செய்வோரும் இவ்வுலகத்து எல்லா இன்பங்களையும் துய்த்துப் பின் திருக்கயிலை சேர்வார்கள்.

முன்ஞெரு கற்பத்தில் உயிர்களெல்லாம் பெரும் பாவத்தில் மூழ்கத் தேவர்கள் எல்லாரும் திருக்கயிலை சென்றுசிவபெருமானிடம்விண்ணப்பித்தனர் சிவ பெருமான உயிர்கள் பாவம் நீங்கி நற்கதி அடைய ஆகம புராண வேதங்கள் அனைத்தும் மலைவடிவமாகிப் பூமியில் அமர்நதிருக்கின்றன; அவற்றை நீக்குவோம்; அவற்றில் மூழ்கி உயிர்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளட்டும என்று அருளிச்செய்தார். அவ்வாறே அது ஆயிரம் யோசனை பரப்புள்ள நீர்நிலை ஆயிற்று அப்புனல் ஒரு பெண்வடிவம் எடுத்துக் கயிலாயத்தும் வைகுண்டத்தும் சத்திய லோகத்தும் பன்னிரண்டு பன்னிரண்டு வருடங்கள் தங்கிற்று.


வடக்கு
சப்த மாதாக்கள் பூஜித்த ஸ்தலங்கள்
காவேரி
ரிஷப தீர்த்தம்
மேற்கு
கிழக்கு
ஸ்ரீ மாயூரநாதர் - ஸ்ரீ அபயாம்பிகை
அனவித்தை
நாதசன்மா
சந்நதி
பாபநாச தீர்த்தம்
பிரம்ம தீர்த்தம்
தெற்கு

சத்தியலோகத்தில் இருக்கும்பொழுது அகத்தியர் அங்கே சென்றார்; அப்பெண்ணை விரும்பினார். பிரமன் அதனை அறிந்து இவளை உம்முடைய கமண்டலத்தில் கொண்டு போகுக என்று ஆணை தந்தனர். அகத்தியர் அவ்வாறேபெற்றுக் குடகுமலையைச்சார்ந்தார். அங்கே புரசமரம் ஒன்றில் அனேக ரிஷிகள் வாழ்ந்து வந்தனர் இந்திரன் ஓமத்திற்காக அதனை வெட்டினான். முனிவர்கள் சினந்து உன்னுடைய அரசாட்சி ஒழிக எனச் சாபம் தந்தனர். இந்திரன் நீங்கள் அனைவரும் மூங்கிலாகுங்கள் எனச் சாபம் தந்தான். முனிவர்கள் 'எங்களுக்குச் சாபவிமோசனம் எப்போது?' என்று கேட்க ஓர் முனிவர் இங்கு வருவார் அவரது கமண்டலத்திலுள்ள தண்ணீர் உங்கள்மீது படுமாயின் மூங்கில் வடிவம் நீங்கும் என்று கூறி மறைந்தான். அவ்வாறே அவர்கள் மூங்கிலாக இருக்கின்றனர். அந்தக்காலம் இப்பொழுது ஒத்துக் கொண்டது. குறுமுனி கொண்டுவந்த கமண்டலத்தின்மீது ஒருகாகம் உட்கார்ந்தது. முனிவர் காகத்தைப் போ போ என்று விரட்டினர். கமண்டலம் கவிழ்ந்தது. தண்ணீர் எங்கும் பரவிற்று. மூங்கிலெல்லாம் முனிவர் வடிவம் பெற்றன. நீர் கவேரமுனிவனுடைய காதில் புகுந்து வெளிவந்தது. ஆதலால் காவேரி எனனும் பெயர் பொருந்தியது ; கடலைநோக்கிப்பாய்ந்தது இதனைக்கண்ட அகத்தியர் இக்கடலையே உண்டுவிடுகின்றேன் என்று சொல்லி ஓடிவந்தார். மாயூரநாதரைச் சேவித்தார். மாயூரநாதர் உலோபாமுத்திரை என்னும் பெண்ணை இடபதீர்த்தக் கரையில் அவருக்குக் கல்யாணம் பண்ணி வைத்தார். அந்த விழா இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

காசிபமுனிவர் மக்கட்பேறு விரும்பி இடப தீர்த்தத்தில் நீராடினார். காவிரியம்மன் காட்சி

கொடுத்து நீ தனியாக நீராடாதே; மனைவியுடன் வந்து நீராடுக; மக்கள் உதிப்பர் என்று சொல்லி மறைந்தார். அவர் அவ்வண்ணமே வந்து நீராடினார். அந்த இடம் காசிப தீர்த்தம எனப் பெயர் பெறும். அதில் மூழ்கினோர் நற்புத்திரப்பேறு அடைந்து மகிழ்வார்கள். இப்படி புலத்தியர். பிரமன், திருமால் மன்மதன், தயரதன், பாண்டு முதலியர்கள் இதில் நீராடி மகப்பேறு அடைந்தார்கள்.

இவ்வண்ணம் மாயூரத்தலத்தின் பெருமைகளைக் கேட்ட நைமிசாரண்ணிய முனிவர்கள் இத்தலத்திற்குச் சென்று வழிபட்டு உய்யவேண்டுமானால் நாங்கள் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகளையும் விளக்கியருளுக என்று சூதபுராணிகரை வேண்டிக் கொள்ள அவர் சவுசவிதி, பற்கொம்புவிதி, ஸ்நானவிதி அநுஷ்டானவிதி, சூரியபூசை. சிவபூசை, போசனம் சிவாலய தரிசனம், செபம், நிஷ்டை இவைகளின் விதிஅனைத்தையும் உபதேசித்தார். நைமிசாரண்ணிய முனிவர்கள் சூதமுனிவரோடு மாயூரத்தலத்தை அடைந்து சிறந்த நாளில் இடபதீர்த்தத்தல் நீராடி, பிரமதீர்த்தம் முதலியவற்றிலும் தோய்ந்து. அஞ்சல் நாயகி சமேத மாயூரநாதரை வழிபட்டுப் பல ஆண்டுகள் தங்கியிருந்தனர். மாயூரநாதரை வழிபட்டு விடைகொண்டு மீண்டும் நைமிசாரண்ணியம் அடைந்து திருவடித்தியானத்தோடு சிவானந்த வெள்ளத்தில் அழுந்தினர்.

அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயிலின்

கல்வெட்டுச் சுருக்கம்

இந்தத் திருக்கோயிலில் ஐந்து " கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகள் கல்வெட்டுத் துறையாளரால் வெளியிடப்பெற்றுள்ள 1911 ஆம் ஆண்டு அறிக்கையில் 300. 301 எண்களுள்ள கல்வெட்டுக்களிலும், 1907 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ள 371, 372, 373 எண்களுள்ள கல்வெட்டுகளிலும் அறியக்கிடக்கின்றன.

1 மதுரையும் ஈழமும் கொண்டருளிய இராசகேசரிவர்மராகிய திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜாதிராஜதேவர் 14-ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இது சிதிலமானது மேலும் கல்வெட்டு முழுவதும் பொறிக்கபடாமலும் உள்ளது. அந்தக் கல்வெட்டுக் 'கடல் சூழ்ந்த பார்மாதரும், என்னும் அவன் மெய்க்கீர்த்தியின் பிற்பகுதியைத் தெரிவிக்கிறது.

2 ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டியன் 10-ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. இதுவும் சிதிலமானது.

3 திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவரின் 26-ஆம் ஆண்டில் தீட்டப்பட்ட கல்வெட்டு. பணம் அளித்ததைத் தெரிவிக்கின்றது.

4 ஷடி அரசனின் 14-ஆண்டுக் கல்வெட்டு. திருமயிலாடுதுறையுடையார் கோயில் பள்ளியறை நாச்சியாருக்கு நிலம் அளித்ததை இது குறிப்பிடுகிறது.

5 கர்ப்பக்கிருகத்தின் முன்பக்கத்திலே தரையில் வைத்துக் கட்டுப்பட்டுள்ள கல்வெட்டு ஒரு துண்டு கல்வெட்டாக இருக்கிறது.



உ

தேவாரப் பாடல்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

கரவின் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே 1

உரவெங் கரியின் உரிபோர்த்த
பரமன் னுறையும் பதியென்பர்
குரவஞ் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே. 2

ஊனத் திருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனொத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. 3

அஞ்சொண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேல்
துஞ்சும் பிணியா யினதானே 4

கணியார் மதிசெஞ் சடையான்றன்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியா யின்தீர்த் தருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே. 5

தொண்ட ரிசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. 6

அணங்கோ டொருபா கமமர்ந்து
இணங்கி யருள்செய் தவனூராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலா டுதுறையே. 7

சிரங்கை யினிலேந் தியிரந்த
பரங்கொள் பரமேட் டிவரையால்
அரங்கவ் வரக்கன் வலிசெற்ற
வரங்கொள் மயிலா டுதுறையே. 8

ஞாலத் தைநுகர்ந் தவன்றானும்
கோலத் தயனும் அறியாத
சீலத் தவனூர் சிலர்கூடி
மாலைத் தீர்மயிலா டுதுறையே. 9

நின்றுண் சமணும் நெடுந்தேரர்
ஒன்றும் அறியா மையுயர்ந்த
வென்றி யருளா னவனூராம்
மன்றன் மயிலா டுதுறையே. 10

நயர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வா மிவையுற் றுணர்வார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

ஏனவெயி றாடரவொ டென்புவரி
யாமைஇவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை அதளுடைய
படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்க ளாகுதியின்
மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட
மூசுமயி லாடுதுறையே. 1

அந்தண்மதி செஞ்சடையர் அங்கணெழில்
கொன்றையொ டணிந்தழகராம்
எந்தமடி கட்கினிய தானமது
வேண்டிலெழி லார்பதியதாம்
கந்தமலி சந்தினொடு காரகிலும்
வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர்
சிந்துமயி லாடுதுறையே.

தோளின்மிசை வரியரவ நஞ்சழல
வீக்கிமிசை நோக்கரியராய்
மூளைபடு வெண்டலையில் உண்டுமுது
காடுறையு முதல்வரிடமாம்
பாளைபடு பைங்கமுகு செங்கனி
உதிர்த்திட நிரந்துகமழ்பூ
வாளைகுதி கொள்ளமடல் விரியமணம்
நாறுமயி லாடுதுறையே. 3

ஏதமிலர் அரியமறை மலையர்மக
ளாகியவி லங்குநுதலொண்
பேதைதட மார்பதிட மாகவுறை
கின்றபெரு மானதிடமாம்
காதல்மிகு கவ்வையொடு மவ்வலவை
கூடிவரு காவிரியுளால்
மாதர்மறி திரைகள்புக வெறியவெறி
கமழுமயி லாடுதுறையே. 4

பூவிரி கதுப்பின்மட மங்கையர
கந்தொறு நடந்துபலிதேர்
பாவிரி யிசைக்குரிய பாடல்பயி
லும்பரமர் பழமையெனலாம்
காவிரி நுரைத்திரு கரைக்குமணி
சிந்தவரி வண்டுகவர
மாவிரி மதுக்கிழிய மந்திகுதி
கொள்ளுமயி லாடுதுறையே. 5

கடந்திகழ் கருங்களி றுரித்துமையும்
அஞ்சமிக நோக்கரியராய்
விடந்திகழு மூவிலைநல் வேலுடைய
வேதியர் விரும்புமிடமாம்

தொடர்ந்தொளிர் கிடந்ததொரு சோதிமிகு
　　தொண்டையெழில் கொண்டதுவர்வாய்
மடந்தையர் குடந்தைபுனல் வாசமிக
　　நாறுமயி லாடுதுறையே. 6

அவ்வதிசை யாருமடி யாருமுளா
　　ராகவருள் செய்தவர்கள்மேல்
எவ்வமற வைகலும் இரங்கியெரி
　　யாடுமெம தீசனிடமாம்
கவ்வையொடு காவிரிக லந்துவரு
　　தென்கரை நிரந்துகமழ்பூ
மவ்வலொடு மாதவிம யங்கிமணா
　　நாறுமயி லாடுதுறையே. 7

இலங்கைநகர் மன்னன்முடி யொருபதினொ
　　டிருபதுதோள் நெரியவிரலாள்
விலங்கலி லடர்த்தருள் புரிந்தவ
　　ரிருந்தவிடம் வினவுதிர்களேல்
கலங்கல் நுரை யுந்தியெதிர் வந்தகய
　　மூழ்கிமலர் கொண்டுமகிழா
மலங்கிவரு காவிரிநி ரந்துபொழி
　　கின்றமயி லாடுதுறையே 8

ஒண்டிறலின் நான்முகனு மாலுமிக
　　நேடியுணா ராதவகையால்
அண்டமுற அங்கியுரு வாகிமிக
　　நீண்டஅர னுறைதிடமாம்
கெண்டையிரை கொண்டுகெளி றுருடனி
　　ருந்துகிளர் வாயறுதல்சேர்
வண்டல்மணல் கெண்டிமட நாரைவிளை
　　யாடுமயி லாடுதுறையே 9

மிண்டுதிறல் அமணரொடு சாக்கியரும்
அலர்தூற்ற மிக்கதிறலோன்
இண்டைகுடி கொண்டசடை எங்கள்பெரு
மானதிட மென்பரெழிலார்
தெண்டிரைப ரந்தொழுகு காவிரிய
தென்கரை நிரந்துகமழ்பூ
வண்டலை திளைக்கமது வந்தொழுகு
சோலைமயி லாடுதுறையே 10

நிணந்தரும யானநில வானமதி
யாதொரு சூலமொடுபேய்க்
கணந்தொழுக பாலிகழ லேத்திமிக
வாய்த்ததொரு காதன்மையினால்
மணந்தண்மலி காழிமறை ஞானசம்
பந்தனமயி லாடுதுறையை
புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய்
வார்பெறுவர் பொன்னுலகமே 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை
உள்ளம் உள்கி யுரைக்குந் திருப்பெயர்
வள்ளல் மாமயி லாடு துறையுறை
வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே. 1

சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை தீருமென் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயி லாடு துறையரன்
கொத்தினிற்பொலிகொன்றைகொடுக்கில்லே. 2

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் குங்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே. 3

வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்செ லாளுமை பங்கன் அருளிலே. 4

குறைவி லோங்கொடு மானுட வாழ்க்கையால்
கறைநி லாவிய கண்டனெண் டோளினன்
மறைவ லான்மயி லாடு துறையுறை
இறைவன் நீள்கழல் ஏத்தி யிருக்கிலே. 5

நிலைமை சொல்லுநெஞ் சேதவ மென்செய்தாய்
கலைக ளாயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளுந் தங்கவே 6

நீற்றி னன்நிமிர் புன்சடை யான்விடை
ஏற்றி னன்நமை யாளுடை யான்புலன்
மாற்றி னன்மயி லாடு துறையென்று
போற்றுவார்க்கு முண்டோ புவிவாழ்க்கையே 7

கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே 8

பணங்கொ ளாடர வல்குற் பகீரதி
மணங்கொ ளச்சடை வைத்த மறையவன்
வணங்கு மாமயி லாடு துறையரன்
அணங்கொர் பால்கொண்ட கோலம் அழகிதே 9

நீணி லாவர வச்சடை நேசனைப்
பேணி லாதவர் பேதுற ஒட்டினேம்
வாணி லாமயி லாடு துறைதனைக்
காணில் யார்க்குங் கடுந்துயர் இல்லையே. 10

பருத்த தோளும் முடியும் பொடிபட
இருத்தி னானவன் இன்னிசை கேட்டலும்
வரத்தி னன்மயி லாடு துறைதொழும்
கரத்தி னார்வினை கட்டறுங் காண்மினே 11

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —